விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 285 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 13 ஞாயிற்றுக்கிழமை (29.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணத்தில் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
TCN EXPRESS
208, GALLE ROAD, COLOMBO-6.
321, K.K.S.ROAD, JAFFNA.
MAIN STREET, MANNAR.
T.P: 0777 554528
(386)

# இலங்கையின் அபிவிருத்திக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கொண்டுவரத் தயார்

## இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்



(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு புதிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கொண்டுவருவதற்கு அமெரிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் 32வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.

19

# பிரிந்து சென்றவர்கள் வந்து இணையுங்கள்

## பங்காளிக் கட்சிகளுக்கு தமிழரசுக் கட்சி அழைப்பு

(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து இணையுமாறு பங்காளிக் கட்சிகளுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)



### முன்னாள் ஜனாதிபதிகளுக்கு

# 3 ஆண்டுகளில் ரூ.27 கோடி செலவு

(கொழும்பு)

இலங்கையில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு 3 ஆண்டுகளில் 27 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,

19

### வாக்குறுதி அளித்தபடி

# எரிபொருள் விலையை குறையுங்கள்

### ஜனாதிபதியிடம் கஞ்சன



(கொழும்பு)

தேர்தலில் வாக்குறுதியளித்தபடி எரிபொருள் விலையைக் குறையுங்கள் என ஜனாதிபதி

19

### க.பொ.த (சா/த)

# பெறுபேறுகள் வெளியாகின

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றிரவு வெளியாகின.

பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகள் 'doenets.lk/examresults' தளத்தில் சுட்டெண் உள்ளிட்ட விபரங்களை உள்ளீடு செய்வதன் மூலம்பெறுபேறுகளை அறிந்து கொள்ள முடியும்.

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை கடந்த மே மாதம் 6ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு தனிநபர்கள் கொண்ட அமைப்பு

## வவுனியாக் கூட்டத்தில் கருத்து முரண்பாடு

(வவுனியா)

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு தனிநபர்கள் கொண்ட அமைப்பு எனத் தெரிவித்த கருத்தால் வவுனியாவில் இடம்பெற்ற கூட்டத்தில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மாற்றத்துக்கான மாற்று வழி என்னும் கருப்பொருளில் வவுனியாவில் சிவில் அமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்று நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த தமிழ்த்

19

### பாலைதீவுக் கடலில்

# கணவாய் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

பாலைதீவுக் கடலில் கணவாய் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் நேற்று உயிரிழந்துள்ளார்.

காக்கைதீவு, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கனகராசா சுரேஸ்குமார் (வயது-39) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக் காலை 6

04

# இருபாலையில் விபரீத முடிவெடுத்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இருபாலையில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் இருபாலை கிழக்கைச் சேர்ந்த விஜயரட்ணம் யோகேஸ்

19

### யாழில் கன்றுத்தாச்சிப் பசுவினை

# இறைச்சிக்காக வெட்டிய மூவர் கைதாகி மறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழில் கன்றுத்தாச்சிப் பசுவினை இறைச்சிக்காக வெட்டிய மூவர் கைதாகி விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை பொன்னாலை கிருஷ்ணன் கோயிலுக்குப் பின்புறம் உள்ள புதர்ஒன்றினுள்வைத்து, 5 மாதங்கள் கர்ப்பிணியான பசு மாட்டைச் சிலர் இறைச்சிக்காக வெட்டியுள்ளனர்.

19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNICORN

**ஆஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிட உரிமை.**

- அடிப்படைத் தகுதிகள்
  - NVQ level 4 அல்லது அதற்கு மேல்.
  - ஏதாவது ஒரு வேலையில் 2 வருட அனுபவம்.
  - ஆங்கில தகுதி IELTS இல் 5.0 அல்லது அதற்கு மேல்.
  - நான்கிலிருந்து ஆறு மாதங்களில் பயணம்.
- செலவுத் தொகை 66 000 Australian Dollars இதனை மூன்று தவணைகளில் கட்டலாம்.
- தேவை கருதி Bank Loans வசதி செய்து தரப்படும்.
- அவுஸ்திரேலியா தொழிலாளர் துறையின் ஆதரவு பெற்ற விசா.

(2155)

**077 768 7821**
**439, Temple Road, Nallur.**
**info@unicornmigrate.com**

உங்கள் CVஐ email மூலமாக அல்லது 077 768 7821 ற்கு WhatsApp மூலம் அனுப்பி வையுங்கள். நாங்கள் இலவசமாக அதனை ஆராய்ந்து உங்களிற்கு அறியத்தருவோம்.



## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார்துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும். (2147)

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
**077 138 7596, 071 999 9306**


# சுற்றுலாவிகள் அதிகரிப்பு

மாதத்தின் முதல் 25 நாட்களில் 99,955 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 21,607 ஆகும்.

மேலும், பிரித்தானியாவிலிருந்து 7,496 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 6,651 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 6,640 சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

அதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 14 இலட்சத்து 62 ஆயிரத்து 623 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)


## ஆண் வேலையாட்கள் தேவை

- யாழ். நகரில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு வியாபாரம் செய்யும் அனுபவம் உள்ள 18 - 30 வயதுடைய ஆண் வேலையாள் தேவை.
- தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- மாதம் 60,000 - 70,000 அடிப்படை சம்பளம் வழங்கப்படும்.

நிரந்தர வேலை வழங்கப்படும். வியாபாரம் தெரிந்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (2156)

தொடர்புகளுக்கு: **0779370000 0759881000**



சிங்கப்பூர், டுபாய் போன்ற நாடுகளுக்காக ஆகக்குறைந்த கட்டணத்தில் Business Visa பெற்றுக்கொள்ளலாம்.

சிங்கப்பூர், டுபாய் ஆகிய நாடுகளில் உங்கள் வியாபாரத்தை விஸ்தரித்துக்கொள்ளுங்கள்.

அதற்கென 100% உரிமத்துடன் Business Visa பெறுவதற்கான வசதிகளை நாங்கள் தயார்படுத்தித் தருகின்றோம். (2146)

**ONESTOP PROFESSIONAL (PVT) LTD**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**
**077 434 3054**



DHL MoneyGram money transfer Ria WESTERN UNION WU

உலகெங்குமுள்ளஉறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப உறவுகளிடமிருந்து Western Union, Money Gram, Ria மூலம் அனுப்பியபணத்தினை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடுங்கள்அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை (C-1278)

**SRI MURUGAN TELE COMMUNICATION & AGENCY POST OFFICE**



## மணமகள் தேவை

தேசிய கல்வியியற்கல்லூரி BA பட்டதாரி ஆசிரியர், உத்தரட்டாதி 7 இல் செவ்வாய், கிரகபாவம் 70 உடைய மணமகனுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகள் தேவை. (C-1281)

**T.P: 077 562 7795**



## வேலையாள் தேவை

மானிப்பாயில் இயங்கும் பன்சி கடைக்கு பெண் விற்பனையாளர் தேவை. (2176)

தொடர்புகளுக்கு;
**077 528 0006**



## விற்பனைக்கு உண்டு

புடைவைக் கடைக்குத் தேவையான பொருட்கள் விற்பனைக்கு உண்டு. உடுப்புகள் அனைத்தும் விலைக் கழிவுடன் விற்கப்படும். (2144)

Call:-
**071 415 0995, 021 222 5686**


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. அ.கலைச்செல்வன்


(கணக்காளர் ஆளுநர் அலுவலகம் வடக்கு மாகாணம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் வடக்கு மாகாணம் )

உலகின் முதற்தர பல்கலைக்கழகமான Oxford and Cambridge International UK பல்கலைக்கழகத்தில் 31.10.2024 இல் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் நிதி முகாமைத்துவத் துறையில் கலாநிதி (PhD) பட்டம் பெற இருக்கும் எமது மதிப்புக்குரிய க.பொ.த உயர்தர(1995) கணக்கீட்டு ஆசிரியர் திரு.அ.கலைச்செல்வன் (கணக்காளர் ஆளுநர் அலுவலகம் வடக்கு மாகாணம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் வடக்கு மாகாணம்) அவர்களை மேன்மேலும் பட்டங்கள் பெற்று உலகம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

(C-1284)

வாழ்த்துவோர்:
IAS கல்வி நிலையம், ஆவரங்கால்.
1995 A/L மாணவர்கள்.

## மரண அறிவித்தல்



| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
| --- | --- |
| 1936 - 11 - 26 | 2024 - 09 - 24 |

### கார்த்திகேசு இராசரத்தினம் (குயிலப்பா)

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் மூளாய், அல்வாய், குருமன்காடு, பூந்தோட்டம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கார்த்திகேசு இராசரத்தினம் அவர்கள் 2024.09.24 ஆம் திகதி இரவு செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - சிவக்கொழுந்து(பிள்ளையக்கா) தம்பதியினரின் அன்பு மகனும் கோவிந்தபிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வள்ளிநாயகி அவர்களின் பாசமிகு கணவரும் இராஜகுலேந்திரன்(கனடா), ரஜனி(மஞ்சு - அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (2024.09.30) நாளை திங்கட்கிழமை பகல் 12 மணியளவில் அல்வாய் வடக்கு சாத்திரியார் வளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சாத்திரியார் வளவு, அல்வாய் வடக்கு, அல்வாய்.
தொடர்புகளுக்கு: 077 407 3046
தகவல்: கா.யோகரத்தினம் தம்பசிட்டி.

யா/கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலையில்
ஆரம்பக் கல்விப் பிரிவின் பகுதித் தலைவர்

## திருவாட்டி ஜெயக்குமாரி முருகதாசன்

அவர்களின்

## மணிவிழா வாழ்த்து



சேவை விபரம்

- யா/குடத்தனை அ.த.க.பாடசாலை 01.09.1992 - 28.02.1993
- யா/தட்டாதெரு மெ.மி.த.க பாடசாலை 01.03.1993 - 01.01.2001
- யா/வட இந்து மகளிர் கல்லூரி 02.01.2001 - 23.02.2010
- யா/புற்றளை மகா வித்தியாலயம் 24.02.2010 - 24.04.2018
- யா/கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை 25.04.2018 - 29.09.2024

உள்ளத்தில் வாஞ்சையுடன் உதட்டில் புன்னகை தவழ்ந்திட அறிவுப் பசிக்கு அமிர்தமாம் ஆரம்பக் கல்வி தனை அகமகிழ்ந்தே முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றி ஓய்வு பெறும் ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

(C-1280)

வாழ்த்துக்களுடன்... ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூதரகங்களில் தகுதியின்றி பணியாற்றுவோரை இலங்கைக்கு அழைக்க தீர்மானம்

## அநுர அதிரடி


(கொழும்பு)

**இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகங்களில் கடமை யாற்றும் முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களின் குடும்ப உறவினர்களை திருப்பி அழைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் அரசாங்கத்துக்கு நெருக்கமான முக்கியஸ்தர்களின் குடும்ப உறுப்பினர்கள் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது, அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் எந்தவொரு நியமனத்தையும் வழங்குவதில்லை என்ற நிலைப்பாட்டில் உள்ளது.

அதன் காரணமாக போதிய தகுதிகள் இன்றி கடந்த காலங்களில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதர கங் களில் அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட



அதிகாரிகளைத் திருப்பி அழைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எதிர் வரும் நாட்களில் அவர்கள் திருப்பி அழைக்கப்பட்டு அந்த இடங்களுக்கு இராஜதந்திர துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள் நியமிக்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது. (நி)

### 30 ஆம் திகதிக்குள்

# வரி செலுத்த தவறின் அபராதம் விதிக்கப்படும்

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

வரி செலுத்தத் தகுதியான அனைவரும் 2023/2024 ஆம் ஆண்டுக்கான வருமான வரியை செப்ரெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த கால அவகாசத்துக்குள் வரி செலுத்தத் தவறினால் அபராதம் மற்றும் வட்டி அற விடப்படுவதோடு தள்ளுபடி செய்யப்படவோ குறைக்கப்படவோ மாட்டாது என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்தோடு நிலுவையில் உள்ள அனைத்து இயல்பு நிலை வரிகளையும் எதிர் வரும் ஒக்டோபர் 30ஆம் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என்றும் உள்நாட்டு இறைவரித்திணைக்களம் நினைவூட்டியுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் 1944 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளலாம் அல்லது அருகிலுள்ள பிராந்திய அலுவலகத்துக்கு சென்று மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (நி)

## குமார வெல்கம காலமானார்




(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் குமார வெல்கம (74 வயது) காலமானார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் காலமானார். (நி)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21.03.1936

மறைவு 26.09.2019

## அமரர். செல்லத்துரை நடேசபிள்ளை

(அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகன் கோவில் தர்மகர்த்தா)

அன்பும், பண்பும் பாசமும் நிறைந்த
எங்கள் அன்புத் தெய்வமே அப்பா!
நீங்கள் இனிச்சபுளியடியான்
பாதம் அடைந்து இன்றுடன் ஐந்து
ஆண்டுகள் ஆகிவிட்டதப்பா, ஐந்து
ஆண்டுகள் ஆனாலும் ஐயாயிரம் ஆண்டுகள்
ஆனாலும் எங்கள் நெஞ்சங்களில் வீற்றிருக்கும்
தெய்வமாகிவிட்டீர்கள் அப்பா.
நீங்கள் இனிச்சபுளியடியானின் பாதத்தில்
இருந்து எங்களை ஆசீர்வதிக்க கரம் கூப்பி
சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

2 ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

நடேசபிள்ளை குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# தேசிய மட்ட பளுதூக்கல் மகாஜனவுக்கு தங்கப் பதக்கம்



அகில இலங்கைப் பாடசாலை களுக்கிடையிலான தேசிய மட்ட பளுதூக்குதல் போட்டியில் தெல் லிப்பளை மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த ரீ.வித்தகி தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள் ளார்.

அகில இலங்கை பாடசாலை களுக்கு இடையிலான பெண் களுக்கான பளுதூக்கல் போட்டிகள் பொலநறுவை இராஜகிய தேசிய பாடசாலையில் நடைபெற்று வரு கிறது.

இதில் 17 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான 71 கிலோ எடைப் பிரிவில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த ரீ.வித்தகி 100 கிலோ எடை தூக்கி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றி யுள்ளார். (6-90)

# டொன் பிரட்மனின் சாதனையை சமன் செய்த கமிந்து மெண்டிஸ்

அணிகளுக்கு இடையிலான இரண் டாவது டெஸ்ட் போட்டி காலியில் நடை பெற்று வருகிறது.

இந்தப் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை அணியின் இளம் வீரர் கமிந்து மெண்டிஸ் முதல் இன்னிங்ஸில் அதிக பட்சமாக 182 ரன்கள் எடுத்தார்.

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சௌத் ஷகீலின் சாத னையை கமிந்து மெண்டிஸ் முறி யடித்துள்ளார்.

அவர் அறிமுகமானது முதல் இது வரை விளையாடியுள்ள 8 போட்டிகளி லும் அரைசதத்துக்கும் அதிகமான ரன் களை குவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் அவரது அதிகபட்ச ஸ்கோர் 182 ஆக உள்ளது.

இரண்டாவது டெஸ்ட் போட் டியின் முதல் இன்னிங்ஸில் 182 ரன்கள் எடுத்த தன் மூலம், கமிந்து மெண்டிஸ் அவுஸ் திரேலிய அணியின் முன்னாள் வீரர் டான் பிரட்மனின் சாதனையை சமன் செய் துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் குறைந்த இன் னிங்ஸ்களில் 1000 ரன்களைக் கடந்த வீரராக கமிந்து மெண்டிஸ் மாறி சாதனை படைத்துள்ளார்.

அவர் டெஸ்ட் போட்டிகளில் 1000 ரன்களை கடக்க 13 இன்னிங்ஸ்கள் எடுத்துக் கொண்டுள்ளார். அவுஸ்திரே லிய அணியின் முன்னாள் வீரரான டொன் பிரட்மனும் 13 இன்னிங்ஸ்களில் 1000 ரன்களைக் கடந்துள்ளார்.

இதன் மூலம், டொன் பிரட்மனின் சாதனையை கமிந்து மெண்டிஸ் சமன் செய்துள்ளார்.

டெஸ்டில் குறைந்த இன்னிங்ஸ் களில் 1000 ரன்களைக் கடந்த வீரர்கள் வரிசையில் ஹெர் பெர்ட் சட்கிளிஃப் - 12, எவர்டான் வீக்ஸ் - 12, டொன் பிரட்மன் - 13 மற்றும் கமிந்து மெண்டிஸ் - 13 இன் னிங்ஸ் முறையே உள்ளனர். (6)




## கணவாய்...

மணியளவில் காக்கைதீவுக் கடலில் இருந்து பாலைதீவுக் கடலுக்கு கண வாய் பிடிப்பதற்காகக் கம்பு நடுவதற்கு ஒரு படகில் ஐந்து பேர் சென்றுள்ளனர்.

பாலைதீவுக் கடலில் வேலைகளை மேற்கொள்ளும் போது குறித்த நபர் நெஞ்சு வலிக்கிறது என மயக்கமடைந் துள்ளார். மயங்கிய நிலை யிலேயே யாழ். போதனா வைத் தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் ஏற் கெனவே உயிரிழந்ததாகத் தெரிவித்த னர்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெய பாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற் றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தி னார். (ம-7)


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் மங்களம் மகேஸ்வரி

தோற்றம் 1936.03.09 மறைவு 2024.09.13



கடந்த 13.09.2024 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி அமரர் **மங்களம் மகேஸ்வரி** அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் நாளை (30.09.2024) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறும். அந் நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் உதவி செய்த அன்புள்ளங் களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்திவர்களுக்கும் துண்டுப்பிரசுரங்கள், மலரஞ்சலி வைத்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகள், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சாத்தாகலட்டி, அளவெட்டி வடக்கு.
077 7111 730

தகவல் - குடும்பத்தினர்

(C-1282)



## வீட்டுப் பணிப் பெண் தேவை

- யாழ்.நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை.
- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

தொடர்புகளுக்கு: 075 498 5400, 077 937 0000, 021 221 7600

(2156)



## விற்பனைக்கு

1. யாழ்.மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு அண்மையில் 60 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு.
2. யாழ்.விக்ரோரியா வீதியில் 12 பரப்புக் காணியும்
3. கொழும்பு 7 தும்புள்ள சந்திக்கு அண்மையில் 16 பேர்ச்சஸ் இல் அமைந்த நான்கு மாடிக் கட்டிடமும் விற்பனைக்கு.
4. யாழ்.பிறவுண் வீதியில் 2 பரப்புக் காணியும், 6 பரப்பு வீடும், 16 பரப்புக் காணியும், 6 பரப்புக் வெற்றுக் காணியும் விற்பனைக்குண்டு.
5. யாழ். K.K.S வீதியில் தட்டாதெருச்சந்திக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 10 பரப்பில் அமைந்த மாடிக் கட்டிடமும் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 077 723 2535

(2154)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4000 அரச வாகனங்கள் மாயம்! வெளியான அதிர்ச்சி தகவல்

(கொழும்பு)

**ஜனாதிபதி செயலகம் உட்பட சுகாதாரம், கல்வி, தபால், நீர்ப்பாசனம் ஆகிய பல அரச நிறுவனங்களில் சுமார் 4000 வாகனங்கள் காணாமல் போயுள்ளதாக தெரியவந்துள்ளது.**

இதன் படி, அனைத்து அரச நிறுவனங்களையும் உள்ளடக்கும் வகையில் தேசிய கணக்காய்வு அலுவலகம் விசேட கணக்காய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இந்தக் கணக்காய்வின் பின்னர், காணாமல் போன அல்லது இடம்பெயர்ந்த அரச வாகனங்கள் தொடர்பில் முழுமையான அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அரசாங்கத்தின் பிரதான கணக்காய்வாளர் டபிள்யூ. பி.விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடலில் ஒப்படைக்கப்பட்ட 110 சொகுசு வாகனங்கள் தொடர்பிலான தகவல்களை ஆராய விசேட கணக்காய்வு குழுவொன்று அங்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்துடன் இணைந்து விசாரணைகளை மேற்கொள்வதாக தெரிவித்த கணக்காய்வாளர் நாயகம்,வாகனங்களை பயன்படுத்தியவர்கள் யார் என்பது தொடர்பில் உரிய தகவல்களைச் சரிபார்க்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 1794 வாகனங்கள் காணாமல் போயுள்ளதாக அல்லது இட மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.இதில் 679 கார்கள் மற்றும் 1115 மோட்டார் சைக்கிள்கள் உள்ளன.

மேலும், கல்வி அமைச்சுக்குச் சொந்தமான 212 வாகனங்களும், நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான 880 வாகனங்களும், தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான 45 வாகனங்களும் காணாமல் போயுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (நி)

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணி சங்கத்திற்கு புதிய தலைவர் மற்றும் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக பி.சி அனுர மத்தேகொடவையும், துணைத் தலைவராக பி.சி ராசிக் சரூக்கையும் நியமித்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் சத்துர கல்ஹேன தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் கௌசல்ய நவரத்ன மற்றும் முன்னாள் பிரதித் தலைவர் நலிந்த இந்ததிஸ்ஸ ஆகியோர் பதவி விலகியதன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. (நி)



தியாக தீபம் திலீபனின் 37 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பிரான்ஸ் ஆர்ஜொந்தையில் தியாகதீபம் நினைவுத்தூபி அமைந்துள்ள திடலில் கொட்டும் மழைக்கு மத்தியில் மிகவும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

## புத்தக கண்காட்சியில் கலந்து கொண்ட ஜனாதிபதி



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சிக்கு விஜயம் செய்தார்.

இலக்கிய மாதத்தை முன்னிட்டு இலங்கைப் புத்தகப் பதிப்பாளர் சங்கத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் புத்தகக் கண்காட்சி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெறுகின்றது.

நேற்று முன்தினம் ஆரம்பமாகி ஒக்டோபர் 6ஆம் திகதி வரை நடைபெறும். இக் கண்காட்சி 25 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

அங்கு கூடியிருந்த பெருமளவான மக்கள் புதிய ஜனாதிபதியை குதூகலத்துடன் வரவேற்று மகிழ்ந்தனர். (நி)

## ஊழல்,மோசடிகளை கண்டறிய விசேட குழு

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள பல்வேறு மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்து கண்டறிய முறையான வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

விளையாட்டு நடவடிக்கைகள் மற்றும் கடமைகளின் போது நிகழும் வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் குறித்து கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கு விளையாட்டு அமைச்சிடம் முறையானதொரு திட்டம் இல்லை.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (நி)


TE KUNENGA KI PUREHUROA
MASSEY UNIVERSITY
UNIVERSITY OF NEW ZEALAND
GISM CAMPUS

உங்கள் எதிர்காலத்தை நியூ சிலாந்தில் அமைத்துக்கொள்ளுங்கள்
**Study -Work- Live**

- New Zealand இல் அமைந்துள்ள massey university of New Zealand பங்காளரான இலங்கையில் நுகேகொடையில் உள்ள GISM Campus ஆனது பல கற்கை நெறிகளை உங்களுக்கு வழங்குகிறது.

**(I) Bachelor degrees in five areas**
- Information science
- BioScience
- Business Management
- Construction and QS
- Agri Business

**(II)Masters in Four areas**
- Science
- Construction
- Management
- Emergency Management



- **அடிப்படைத் தகைமைகள்**
G.C.E O/L, G.C.E A/L (London)
- Graduate diploma in information Science கற்கைநெறியின் முதல் வருடத்தை நுகேகொடையில் அமைந்துள்ள GISM Campus இல் நிறைவு செய்து மிகுதிக் கற்கை நெறிக்கு New Zealand செல்லும் வாய்ப்பு. அத்தோடு 60 இலட்சத்துக்கும் மேல் சேமிக்கும் வாய்ப்பு. Family visa, Post Study Work Visa, Highly Paid jobs and PR பெறுவதற்கான வாய்ப்பு.
- 2 ஆம், 3 ஆம் ஆண்டுகளில் Part time Job s செய்யும் வாய்ப்பு.
- 3 வருட பாடநெறி முடிவில் work visa விரும்பினால் PR இற்கு விண்ணப்பிக்கலாம்.
- தரகர்கள் / ஏஜெண்டுகள் இல்லாமல் New Zealand visa பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு.
- Colombo இல் கற்பதற்கு பதிவு செய்வோருக்கு பாதுகாப்பான சூழலில் தங்குமிட வசதிகள் பெற்றுக்கொள்ள வசதி செய்து தரப்படும்.

**அடுத்த பாடநெறி ஆரம்பம் 2024 october**
இன்றே பதிவு செய்யுங்கள்
(சி-2443)
071 224 2242 (English only)
071 683 7679
075 983 7679


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிளிநொச்சியில் நீர் விநியோகம்

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

(தருமபுரம்)

கிளிநொச்சி நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தித் திறனை விட மக்களின் பாவனை அதிகரித்துள்ளமையால் நீர் விநியோகத்தை 24 மணிநேரமும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கிளிநொச்சி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாக வெப்பமான கால நிலை நிலவி வருவதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் பூநகரி, பொன்னகர், பாரதிபுரம், விவேகானந்த நகர் ஆகிய பகுதிகளுக்கு தினமும் காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நீரை விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தற்காலிகமாக குறிப்பிட்ட காலம் வரை மட்டுப்படுத்தப்பட்ட நேரத்துக்கு நீரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இக்காலப் பகுதியில் குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகம் காணப்படுவதனால் பொதுமக்கள் நீரை சிக்கனமாகவும் சேமித்து வைத்தும் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் அறிவித்துள்ளது. (6-316)



கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தின் சிறுவர் சந்தை நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி வித்தியாலயத்தில் நடைபெற்றது. (படம்: மகாலிங்கம்)

# புதைகுழி வழக்கு டிசம்பர் 12 தவணை

(முல்லைத்தீவு)

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் ஈடுபட்டிருந்த தொல்லியல் திணைக்களத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் இறுதி அறிக்கை முல்லை நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து வழக்கு மீண்டும் டிசம்பர் 12 இல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

முல்லை நீதவான் நீதி மன்றத்தில் நீதிபதி த.பிரதீபன் முன்னிலையில் கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையில் காணாமற்போனோர் அலுவலகம் சார்பில் அந்த அலுவலகத்தின் சட்டத்தரணிகளும் சட்ட வைத்திய அதிகாரி கனக சபாபதி வாசுதேவா மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் ஆகியோரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

வழக்கின் பின்னர் சட்ட வைத்திய நிபுணர் கனக சபாபதி வாசுதேவ ஊடகங்களுக்கு தகவல் தெரிவிக்கையில்,

இதுவரை காலமும் மனிதப் புதைகளில் இருந்தும் எடுக்கப்பட்ட மற்றும் மனித எலும்பு கூட்டுத் தொகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட இலக்க தகடு சம்பந்தமான முழு விபரங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளில் 20 வரையான எலும்புக் கூடுகள் முற்றாக பகுப்பாய்வுக்கு உட்பட்ட நிலையில் மிகுதி எலும்புக்கூடுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன மேலும் இந்த வழக்கு மீண்டும் டிசம்பர் 12 ஆம் திகதி தவணையிடப்படுள்ளது எனத் தெரிவித்தார். (6)

# சாரணர் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்கம், பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் நடத்தும் மாவட்ட சாரண திரளணியும், மழலை, குருளைச் சாரணர் விழாவும் மற்றும் பரிசளிப்பு வைபவமும் பரு.மா.சா.கிளைச் சங்கத் தலைவர் மற்றும் பிரதேச செயலாளருமான சி. சத்தியசீலன் தலைமையில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யா/ ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி. ஜமுனா ராஜசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

குறித்த நிகழ்வானது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# புத்தூர் நூலக வாசிப்பு மாதப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வாசிப்பு மாதத்தையொட்டி புத்தூர் பொதுநூலகத்தால் "உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே" எனும் தொனிப்பொருளில் வாசகருக்காக வாசிப்பு மாதப் போட்டி நடத்தப்படவுள்ளன.

சிறந்த வீட்டுத்தோட்டம், வீட்டு நூலகம், நூல் பரிந்துரை போன்றவை இடம்பெறவுள்ள நிலையில் மேற்படி போட்டிகளில் பங்குபற்றுபவவர்கள் புகைப்படம், பெயர் மற்றும் முகவரியினையும் நூல் பரிந்துரை நிகழ்வில் பங்குபற்றுபவர்கள் பெயர் மற்றும் முகவரியுடன் பரிந்துரை செய்யவுள்ள நூலின் பெயரையும் குறிப்பிட்டு 077 407 75 38 என்ற வட்சப் இலக்கத்திற்கு எதிர்வரும் ஒக் டோபர் 11 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு புத்தூர் பொது நூலகர் அறிவித்துள்ளார். (6)


லங்கா மஹறால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615 6719

MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

(354)

மணமகன் தேவை

1994, இந்து, பூசம், HR,
பூர்வீகம் - யாழ்ப்பாணம் ,வதியுமிடம் - Canada
மணமகள் பதிவு இல: 11001.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
C-2441
அழையுங்கள் 076 664 9401

மணமகள் தேவை

1992, இந்து. ஆயிலியம், CIVIL ENGINEER,
பூர்வீகம் - மிருசுவில் ,வதியுமிடம்- Australia
மணமகன் பதிவு இல: 11048.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
C-2441
அழையுங்கள் 076 664 9401

மணமகன் தேவை

1991. இந்து. பூரட்டாதி. DOCTOR,
பூர்வீகம் - சாவகச்சேரி ,வதியுமிடம் - கொழும்பு
மணமகள் பதிவு இல: 11035.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
C-2441
அழையுங்கள் 076 664 9401

மணமகள் தேவை

1992, இந்து. ஆயிலியம். CIVIL ENGINEER,
பூர்வீகம் - உடுவில் ,வதியுமிடம்- கொழும்பு
மணமகன் பதிவு இல: 11048.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
C-2441
அழையுங்கள் 076 664 9401


# இராசிபலன்

29.09 2024
புரட்டாதி 13, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி முன்னிரவு 7.04 மணிவரை

ஆயிலியம் காலை 6.58 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32- 6.02 மணிவரை
சந்நியஸ்த மஹாளயம்

சந்திராஷ்டமம் - பூராடம்

வளவன்

**மேஷம்** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்கள் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருள் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வார்கள், எதிர்பாராத ஒருவர் உதவ முன்வரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், நண்பர்கள் வழியில் அனுகூல முண்டு.

**சிம்மம்** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், குடும்பத்தில் சுமை கூடும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், வங்கியில் சேமிப்பு உயரும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனம் கண்டுகொள்வீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், வழிபாட்டால் ஆதாயம் காணவேண்டிய நாள், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறையுண்டு.

**தனுசு** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், வழிபாடு ஆனந்தம் தரும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், பயணங்கள் கைகூடும்.

**மீனம்** செய்தொழில் மேன்மையுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உடல் நலனில் இருந்த பாதிப்பு அகலும்.

பயத்திற்கு எல்லாமே பெரிதாகத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 461
Viber 076 636 3378



# ஜனாதிபதி அநுரவை நோக்கி நகரும் தமிழ் மக்களின் அரசியல் நம்பிக்கை

**"ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி, ஒட்டு மொத்த இலங்கை மக்களினதும் மனங்களில் ஓர் நேர்க்கணிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.அந்த மாற்றம் அவரின் வெற்றியால் மட்டும் நிர்ணயிக்கப்படவில்லை.**

**மாறாக மிக எளிமையான முறையில் நடந்த அவரின் பதவியேற்பும் அவரின் நம்பிக்கை தரக் கூடிய பதவியேற்பு உரையும் அதனைத் தொடர்ந்து அவர் முன்னெடுத்த நடவடிக்கைகளும் அமைகின்றன.**

**இங்கு ஜனாதிபதி அநுர மீதான நம்பிக்கை என்பது தமிழ் மக்கள் மத்தியிலும் வலுப்பெறுவதை அவதானிக்க முடிகிறது."**



அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின் அவர் மீது மக்களிடம் அதீத நம்பிக்கை ஏற்பட்டுள்ள தெனலாம்.

இந்த நம்பிக்கை தேர்தலுக்கு முன்னதாக சிங்கள மக்களிடம் ஏற்பட்டிருந்தாலும் தேர்தல் முடிவுற்று அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்பு, அவர் மீதான நம்பிக்கை தமிழ் மக்களிடம் அதிகரித்துள்ள தென்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இவ்வாறு தமிழ் மக்கள் அநுர மீது கொண்டுள்ள நம்பிக்கையின் பின்னணியில் இருக்கக் கூடிய ஏதுக்கள் எவை எனும் போது தான்,

அரசியல்வாதிகளின் ஊழல் களை அநுர நிச்சயம் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவருவார் என்ற எதிர்பார்ப்புகள் முன்னிற் பது தெரியவருகிறது.

ஆம், ஒருகாலத்தில் சிங்கள ஆட்சிப் பீடத்தில் யார் இருந் தாலும் அவர்களைத் தமிழ் மக்கள் ஒரு பொருட்டாக நினைத்ததில்லை.

இதை நாம் கூறும் போது, 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத் திரிபால சிறிசேன ஜனாதி பதியாக வெற்றி பெற்றார்.

அவரின் வெற்றிக்குத் தமிழ் மக்களின் வாக்குகளே மூல காரணமாக இருந்தன.

இருந்தும் ஜனாதிபதி மைத்திரி மீது தமிழ் மக்கள் அத்துணை நம்பிக்கை கொள் ளவில்லை.

ஆனால் அநுர குமார திசாநாயக்கவிற்கு ஒப்பீட்டு அளவில் தமிழ் மக்கள் அளித்த வாக்குகள் மிகச் சொற்ப மாயினும் அவர் மீது கொண்டுள்ள நம்பிக்கை உச்சமாக இருப்பது தான் ஏன் என்பது புரியவில்லை.

ஆம், ஒரு காலத்தில் சிங்களவர் ஒருவரை தமிழர்கள் ஆதரிப் பார்களாயின், அதற்காக தமிழ்த் தேசியவாதிகள் அவர்களுக்கு வழங்கிய விருது என்ன என்பதை நாம் கூறியாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இல்லை.

ஆனால், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பொருத் தமான சிங்கள ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பதென்பது அவரவர் சுதந்திரம் என்பது போல நிலைமை மாறியுள்ளமை தான் விசித்திரம்.

உண்மை. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் 15 பேர் கூட்டாக ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள்.

அந்த அறிக்கையில் மாற்றத் துக்காக வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளடங்கியி ருந்தது.

அதாவது, அநுரகுமாரதிஸா நாயக்கவை ஆதரியுங்கள் என்பதே அந்தக் கோரிக்கையின் சாராம்ச மாகும்.

இதை நாம் கூறுவதற்குக் காரணம், கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் இப்படியானதொரு அறிக்கையை பிரஸ்தாப விரிவு ரையாளர்கள் விடுத்திருப்பார் களாயின், அவர்களை தமிழ் மக்கள் விலத்தி வைத்திருப்பார்கள்.

ஆனால் இன்று நிலைமை அதுவல்ல, அநுரகுமார திசாநாயக் கவை ஆதரிக்குமாறு அறிக்கை விடுத்த விரிவுரையாளர்களை முற்போக்குச் சிந்தனையுடையவர் களாகப் பார்க்கின்ற சூழமைவு நம் தமிழ் மண்ணில் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான தொரு நிலைமை நம் மண்ணில் ஏற்படுவதென்பது சாதாரணமான விடயமல்ல.

ஆம், தமிழ்ப் பொது வேட் பாளரை ஆதரிக்க வேண்டும் என்ற தமிழ்ப் பொதுக் கட்ட மைப்பு; தமிழர்கள் ஒன்றுபட்டு தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கும் போது அது சர்வ தேச சமூகம் தமிழ் மக்களின் விவகாரத்தில் தலையிடுவதற்கு உதவுவதாக இருக்கும் என அறிக்கையிட்டது.

அந்த அறிக்கையில் நியாயம் இருப்பது போல உணர்ந்த தமிழ் மக்கள், சங்கு சின்னத்தில் போட்டியிட்ட அரியநேத்திர னுக்குத் தமது வாக்குகளை வழங்கினர்.

ஒட்டுமொத்த தமிழ் மக்க ளினதும் வாக்குகளைப் பெறு வதென்பது சாத்தியமற்றதா யினும் அரியநேத்திரன் பெற்ற வாக்குகள் திருப்தியடையக் கூடியது.

ஆனால் அந்த வாக்குகளைப் பெற்ற தமிழ்ப் பொதுக் கட் டமைப்பு இதோ! நாங்கள் சர்வதேச நாடுகளின் தூதுவர் களைச் சந்திக்கவுள்ளோம். தமிழ்ப்பொது வேட்பாளர் பெற்ற வாக்குகளின் வலி மையை எடுத்துரைப்போம் என்று அறிக்கையிட்டிருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் அதைச் செய்யாமல், நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு போட்டியிடுவது பற்றித் தீர் மானிக்கவுள்ளதாக அறிக்கை யிட்டபோது,

ஓ! தமிழ்ப் பொது வேட் பாளர் என்பது தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு பொதுத் தேர் தலில் களமிறங்குவதற்கான **நாடிபிடித்தல்** என்று தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டனர்.

இங்குதான் ஜனாதிபதி அநுர மீதான நம்பிக்கையும் அவரைப் பலப்படுத்த வேண் டும் என்ற சிந்தனையும் மேலெ ழுகிறது.

ஆம், தமிழ் அரசியல்வாதி கள் தமது நேர்மையை நிரூபிக் காத வரையில்- தமிழ் அரசியல் வாதிகள் தமக்கிடையே ஒற்று மையைப் பேணாத வரையில், தமிழ் மக்கள் தமக்கான ஓர் அரசியல் தலைமையைத் தேர்ந் தெடுக்கவே முற்படுவர்.

அதாவது, தென்பகுதி ஊழல் புரிந்த ஆட்சியாளர்களை ஓரங்கட்டி அநுரகுமார திஸா நாயக்கவை எங்கனம் சிங்கள மக்கள் ஜனாதிபதியாக்கினார் களோ, அதேபோல தமிழ் மக்களும் தங்களுக்கான ஓர் நேர்மையான அரசியல் தலை மையை உருவாக்க முற்படு வர்.

இந்த முயற்சி அநுரகுமார திஸாநாயக்கவை பலப்படுத்து கின்ற ஓர் அரசியல் கட்ட மைப்பாகக் கூட இருக்க லாம்.

ஆகையால், இது விடயத் தில் தமிழ்த் தரப்புகள் சொந்த அரசியல் நலன்களைக் கைவிட்டு தமிழினத்திற்காக நிதானத்துடன் செயற்பட வேண்டும்.

**-விதுரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடதுசாரி அநுரகுமாரவுக்கு முதலில் வாழ்த்துக்கூறிய இந்தியா

மிகக் கடினமான கணிப்புகள், முடிவுகளை எட்டுவதில் இதுவரையில் சந்தித்திருக்காத தேர்தல் விதிமுறை நெருக்கடிகள் எல்லாவற்றையும் கடந்து இலங்கையின் ஒன்பதாவது அதிபராக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். வழமையாகத் தேர்தல் முடிவுகள் மறுநாளே தெரிந்துவிடும். இம்முறை முடிவுகளை அறிவிப்பதிலே நீண்ட தாமதம். காரணம், இதற்கு முன் இரண்டு வேட்பாளர்களுக்கிடையில்தான் ஆட்டம். இந்தத் தடவை ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுர குமார திசாநாயக்க ஆகியோருக்கிடையிலான மும்முனைப் போட்டி. இதற்கப்பால் இன்னொருவராக ராஜபக்ஷக்களின் தரப்பிலிருந்து இளைய ராஜபக்ஷவான நாமல் ராஜபக்ஷவும் போட்டியில் குதித்திருந்தார். தமிழ்த்தரப்பிலிருந்து பொது வேட்பாளராக அரியநேத்திரனும் களமிறக்கப்பட்டிருந்தார். ஆக ஐந்து தரப்புகளுக்கிடையில் போட்டி நடந்தது. இதனால் யாருக்கு வெற்றி வாய்ப்புண்டு என்பதைக் கணிக்க முடியாத நிலை இறுதி வரையில் ஏற்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணி என்று அறியப்பட்ட ஜே.வி.பி-யின் 60 ஆண்டுக்காலக் கனவு இப்போதுதான் நனவாகியிருக்கிறது. ஜே.வி.பி-யின் புதிய வடிவமான தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக அநுரகுமார இந்தக் கனவை நிஜமாக்கியிருக்கிறார். இதன்மூலம் இடதுசாரி அடையாளத்தைக் கொண்ட ஒரு தலைவர் முதற்தடவையாக ஆட்சிக்கு வந்துள்ளார். அதுமட்டுமல்ல, இரண்டு காலகட்டத்தில் ஆயுதப் போராட்டத்தை நடத்திய - அதற்காகத் தடை செய்யப்பட்ட இயக்கமொன்றின் பிரதிநிதியாகவும் அநுர உள்ளார். இது இலங்கை வரலாற்றில் முக்கியமான திருப்பமாகும்.

## வரலாற்றுப் பின்னணி

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (சீனசார்பு) யிலிருந்து 1965 இல் றோகண விஜேவீர தலைமையில் பிரிந்து சென்ற அணி, ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் மக்கள் விடுதலை முன்னணி (JVP)யாக உருவாகியது. இது UNP, SLFP என்ற இரண்டு பாரம்பரியக் கட்சிகளின் ஆட்சிக்கு எதிராக இரண்டு பெரிய கிளர்ச்சிகளை நடத்தியது. முதலாவது புகழ்பெற்ற கிளர்ச்சி 1971இல் நடந்தது. (அப்பொழுது அநுரகுமார திஸாநாயக்கவுக்கு 3 வயது). அந்தப் போராட்டத்தை அன்றைய சிறிமாவோ பண்டாரநாயக்க அரசு இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் உதவியோடு நசுக்கியது. அதன்போது 40,000 வரையான ஜே.வி.பி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி தடைசெய்யப்பட்டு, விஜேவீர சிறைப்படுத்தப்பட்டார்.

விஜேவீரவை 1977இல் அன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தன விடுதலை செய்து ஜே.வி.பி மீதான தடையையும் நீக்கினார். 1982இல் ஜெயவர்த்தனவை எதிர்த்து றோகண விஜேவீர ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். எனினும் அவரால் வெல்ல முடியவில்லை.

1987-89 காலத்தில் இலங்கை-இந்திய உடன்படிக்கையை எதிர்த்து இரண்டாவது போராட்டத்தை நடத்தியது. ஜே.வி.பி. உடன்படிக்கையை நீக்குவதோடு இந்திய அமைதிப்படையை இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டும். தமிழருக்கான தீர்வுக்கென உருவாக்கப்பட்ட மாகாணசபை முறையை அகற்ற வேண்டும் எனத் தொடங்கி இந்திய எதிர்ப்பின் உச்சத்தில் 'இந்தியப் பொருட்களுக்கு இலங்கையில் தடை' என்று அறிவித்தது. இதனால் அரசுக்கும் ஜே.வி.பி-க்கும் மிகக் கடுமையான மோதல்கள் ஏற்பட்டன. இருதரப்பிலுமாக மாறி மாறிப் பெருங் கொலைகள் நடந்தன. இலங்கையின் ஆறுகளிலெல்லாம் பிணங்கள் மிதந்தன.

தெருக்களில் ரயர் போட்டு மனிதர்கள் எரிக்கப்பட்டனர். நாடு அச்சத்தில் உறைந்துபோய்க் கிடந்தது. இறுதியில் (1989) றோகண விஜேவீரவும் கொல்லப்பட்டார். அதோடு ஜே.வி.பி-யின் ஆயுதப போராட்டம் முடிவுக்கு வந்தது.

பின்னர் ஜே.வி.பி முற்றாகவே ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு அரசியல் நீரோட்டத்தில் இணைந்தது. 1994இல் இலங்கையின் மூன்றாவது பெரும் சக்தியாக உருவெடுத்தது ஜே.வி.பி. பாராளுமன்றத்தில் அதற்கு அதிக இருக்கைகளும் அமைச்சுப் பதவிகளும் கிடைத்தன. ஆனாலும் அதன் இனவாதப் போக்கு மாறவில்லை. இலங்கை - இந்திய உடன்படிக்கையில் சுட்டப்பட்டிருந்த வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையைப் பிரிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அதைப் பிரித்தனர்.

இதனால் தமிழ், முஸ்லீம் மக்களிடத்திலே ஜே.வி.பி-யைப் பற்றிய அச்சம் ஏற்பட்டது. அந்த அச்சத்தை மேலும் வளர்க்கும் வகையிலேயே தொடர்ந்தும் அது செயற்பட்டது. விடு தலைப் புலிகளுக்கும் அரசுக்கும் நடந்த அமைதிப் பேச்சுகளை எதிர்த்தது. கூடவே மலையக மக்களை இந்திய விஸ்தரிப்பு வாதத்துக்கான கருவிகள் என்று சொல்லி அவர்களை வெளியேற்று மாறு அச்சுறுத்தியது.

ஜே.வி.பி-க்குள் எப்போதும் இரண்டு நிலைப்பட்ட போக்குகள் இருந்தன. ஒன்று, சிங்கள தேசியவாதப் போக்கு. இரண்டாவது, இலங்கையின் பல்லினத் தன்மையை ஏற்றுக்கொள்ளும் நிலைப்பாடு. இதில் சிங்களத் தேசியவாதத் தன்மையே மேலோங்கி இருந்தது. இதனால் பல் லினத் தன்மையை ஆத ரித்த தமிழ்மக்களுக்கான சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டவரான லயனல் போபகே (ஜே.வி. பியின் முன்னாள் செய லாளர்) போன்றோர் விலகிச் சென்றனர். இடதுசாரிய அடையாளத்தைக் கொண்ட அமைப்பாகஜே.வி.பி இருந் தாலும் இலங்கையின் ஏனைய இடதுசாரிய அமைப்புகளையோ ஈழ விடு தலைப் போராட்ட இயக் கங்களையோ ஏற்றதில்லை. இதனால் தமிழ், முஸ்லீம், மலையக மக்களிடையே ஜே.வி.பி-யைப் பற்றிய அச்சமும் சந்தேகமும் இருக்கின்றது. இந்தத் தேர்தலின்போது கூட பெரும்பாலான தமிழ் பேசும் மக்கள்இந்தக்கண்ணோட்டத்திலேயே அதை நோக்கினர்.

அநுர குமார திசாநாயக்க தலைமையிலான இப்போதைய ஜே.வி.பி சற்று மென்போக்கைக் கொண்டுள்ளது. அதற்குள்ளிருந்த தீவிரப் போக்குடைய விமல் வீரவன்ஸ போன்றோர் வெளியேற்றப்பட்டனர். இருந்தாலும் இன்னும் அது பன்மைத்தன்மையோடு விரிவடைய வேண்டியுள்ளது.

## பிந்திய சூழல்

இரண்டு ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் ஒரு பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. 'இதற்கெல்லாம் காரணம் முந்தைய ஆட்சியாளர்கள்' என்று குற்றம் சாட்டி 'வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மேம்படுத்தவும் ஊழலை இல்லாதொழிக்கவும் அதிகார துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்தவும் கட்டமைப்பில் மாற்றம் வேண்டும்' என்கிறது ஜே.வி.பி. அதற்காக அது முற்போக்குச் சக்திகளோடும் ஜனநாயகவாதிகளோடும் இணைந்து புதிய அரசியல் பயணத்தை ஆரம்பித்தது.

ராஜபக்ஷக்களின் ஆட்சியில் வெறுப்படைந்திருந்த மக்கள், கொழும்பில் கோட்டபாய ராஜபக்ஷவை விரட்டுவதற்காக அரகலயப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அதன் பின்னணியிலும் ஜே.வி.பியும் அதிலிருந்து பிரிந்த அணியான முன்னிலை சோசலிஸக் கட்சியும் இருந்தன.

அப்போதே இந்தக் கட்டமைப்பு மாற்றம் பற்றிப் பேசப்பட்டது. அப்போது எழுந்த அந்தத் தொடக் கத்துக்கு இடமளியாமல் ராஜபக்ஷக்களின் ஆதர வோடு ஒரு இடைக்கால ஆட்சியை நடத்தினார் ரணில் விக்கிரமசிங்க. இது மேலும் சீற்றத்தை உண்டாக்கியது மக்களுக்கு. இதனை மாற்ற வேண்டுமென்ற எண்ணம் அலையாக மேலெழுந்தது. அதுவே அநுரவின் வெற்றியாகியிருக்கிறது.

சுதந்திர இலங்கையின் 75 ஆண்டு வரலாற்றில் ஐ.தே.க - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது அவற்றின் நீட்சிகளான பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள்



முன்னணி போன்றவையே மாறி மாறி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி வந்தி ருக்கின்றன.


2015இல் இந்த இரண்டு தரப்புகளும் மிக மோசமான அரசியல் வீழ்ச்சியைச் சந்தித்தி ருந்தன. அது மூன்றாவது சக்தியாக இருந்த ஜே.வி.பி இற்கு ஒரு வாய்ப்பை உண்டாக்கியது. அதைத் தடுப்பதற்கு மேற்படி எதிரும் புதிருமான இருதரப்புகளும் இணைந்து ஆட்சியைக் கைப் பற்றின. அன்று அதொரு அரசியல் அதிசயமாக இருந்தது. ஆனாலும் அடுத்த பத்து ஆண்டுகளுக் குள் அதையெல்லாம் முறியடித்து இப்பொழுது ஜே.வி.பி அந்த இடத்தைப் பிடித்துள்ளது.

ஆனாலும் அநுரவின் வெற்றியென்பது அவர் பிரகடனப்படுத்திய கட்டமைப்பு மாற்றத்தைச் செய்வதிலும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதிலுமே உள்ளது. இனப்பிரச்னைக்குத் தீர்வைக் காண வேண்டும். இப்போது நாடு கடனில் மூழ்கிக் கிடக்கிறது. ஊழல் வாதிகளைத் தண்டிக்க வேண்டும். இவையெல்லாம் மக்களின் எதிர்பார்ப்புகள்.

இவையெல்லாம் நிறைவேற்றுவதற்கு பலமான பாராளுமன்றம் வேண்டும். அதை அமைப்பதற்கு கடுமையாகப் போராட வேண்டியிருக்கும். இப்போது அவரிடம் மூன்று உறுப்பினர்களே உள்ளனர். 115 உறுப்பினர்களை வெற்றியடையச் செய்ய வேண்டும். அதற்கு மக்கள் ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான இன்னொரு தேர்தல் அடுத்த நவம்பர் மாத்தில் வரவுள்ளது. அதில் கிடைக்கும் வெற்றியே ஜே.வி.பியின் நூற்றாண்டுக் கனவுக்கான தொடக்கமாகும்.


இந்த அரசியற் தொடக்கம் தென்னாசியப் பிராந்தியத்தில் புதிய அரசியலொன்றை அறிமுகமாக்கக் கூடும். அதற்குமுன் அநுரவின் வெளியுறவுக் கொள்கை எப்படி அமையவுள்ளது என்பது கேள்வியே. முக்கியமாக இந்தியாவுடனான உறவு! ஏனென்றால் இந்திய விஷ்தரிப்பிற்கு இலங்கையில் இடமில்லை. என்ற ஜே. வி பியின் வெற்றிக்கு முதல் வாழத்து சொன்னது கொழும்பிலுள்ள இந்தியத் தூதரும் டெல்லியிலிருந்து பிரதமர் மோடியுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









**ஊழலற்ற, ஆரோக்கியமான மக்களாட்சியை, சுயநல ஆதிக்க அரசியல் சக்திகள் வாழவிடுமா?**

**யாழ்ப்பாணத்தில் நடக்கும் வாள்வெட்டு கலாச்சாரம் அநுரவின் ஆட்சியில் முற்றாக ஒழிக்கப்படுமா?**

**ரஜினி — யாழ்ப்பாணம்**

**யாழ்ப்பாணத்தில் நடக்கும் வாள்வெட்டு கலாச்சாரம் அநுரவின் ஆட்சியில் முற்றாக ஒழிக்கப்படுமா?**

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வாள் வெட்டுக் குழுக்களுக்கு இருக்கக் கூடிய படையினரின் அரவணைப்பு இல்லாமல் போகும் போது தான் அதன் வீரியம் ஒடுங்கும்.

**ஈஸ்வரன் — உரும்பிராய்**

**மிகவும் அன்புடன் Viyasar அவர்களே! புதிய ஜனாதிபதியுடன், எமது மக்களின் பிரச்சினைகள் பற்றி எமது தமிழ்த் தேசியவாதிகள் பேசுவார்களா அல்லது மீண்டும் தமிழ் தேசியத்தை தொடர்வார்களா?**

அரசியலுக்கு இனவாதம் தீனியல்ல என்பது தென்பகுதியில் உணர்த்தப்பட்டு விட்டது.
ஆனால் இன்னமும் வடக்கும் கிழக்கும் அரசியல்வாதிகளின் சீவியத்துக்கு இனவாதமே முதலீடாக உள்ளது.
ஆயினும் தமிழ் அரசியல்வாதிகள் எத்துணை தூரம் நேர்மையாக நடந்துள்ளார்கள் என்பதை அவர்களே பிரச்சாரம் செய்கிறார்கள்.
எப்படியும் நடைபெறப்போகும் பொதுத் தேர்தலின் போது, தமிழரசியல் வாதிகளின் திருகுதாளங்கள் சந்திக்கு வந்துவிடும்.
பின்னர் நாம் கைகொட்டிச் சிரிக்கலாம். இனி தேசியம் நம் நாடாக மாற்றமுறும்.

**மதுவன் — மீசாலை**

**புதிய ஜனாதிபதி அநுரா அவர்கள் பழைய அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுப்பார் போல வியாசரே!**

எதற்கும் பாராளுமன்றத் தேர்தல் நிறைவடையட்டும்.
பாராளுமன்றம் அநுரவின் கட்டுப்பாட்டில் இருந்தால், உங்கள் கருத்தை சாதகமாகப் பார்க்கலாம்.
சிலவேளை பாராளுமன்றம் எதிரணியிடம் அகப்பட்டால், பாவம் ஜனாதிபதி என்றாகிவிடும்.ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலில் தாம் விட்ட தவறை பொதுத் தேர்தலில் செய்து விடக் கூடாது என்பதில் தென் பகுதி அரசியல்வாதிகள் கங்கணம் கட்டிநிற்கிறார்கள்.
அரசியலில் நட்பும் இல்லை. பகையும் இல்லை. ஆகையால் எதற்கும் பொறுத் திருந்து பார்ப்போம்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சுதன் — குப்பிளான்**

**அரசியல்வாதிகளின் செயற்பாட்டால் நாடு நாசமாய் போனதற்கு ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகள் மக்களுக்கு திருப்தியை ஏற்படுத்துதே!**

இது பெரும் பார்க்கடல், அநுர ஒரு டொல்பின் மட்டுமே.
கடல் யானை, திமிங்கிலம், இராட்சதசுறா இன்னும் பெரும்பெரும் கப்பல்களையே மூழ்கடிக்க வல்ல மீனினங்கள்.
நிலைமை என்னவாகுமோ யார் அறிவார்.

**சி.இளங்கோ — மானிப்பாய்**

**ஊழலற்ற, ஆரோக்கியமான மக்களாட்சியை, சுயநல ஆதிக்க அரசியல் சக்திகள் வாழவிடுமா?**

மக்கள் விழிப்பாக இருந்தால் மாற்றத்தை நிச்சயம் ஏற்படுத்த முடியும்.
அரகலய போராட்டமும் அநுர ஜனாதிபதியானதும் இதற்கு தக்க சான்று.

**துர்க்கா — இளவாலை**

**பொதுத் தேர்தலில் யாருக்கு வெற்றி வாய்ப்பு**

இதற்கான பதில் நவம்பர் மாதம் பதின்னான்காம் திகதி தங்களுக்குத் தெரியப்படுத்தப்படும்.

**துரை — இணுவில்**

**அம்மாவின் அன்பா, அப்பாவின் அன்பா பெரிது?**

அம்மை அப்பனின் அன்பு பெரிது. தந்தையைக் காணாத ஞானசம்பந்தக் குழந்தை அம்மையே அப்பா என்று அழுதது.
அம்மையை முதலில் அழைத்ததனால் போலும், அன்னையவள் பொற்கிண்ணத்தில் ஞானப்பால் கொண்டேகி ஞானசம்பந்தக் குழந்தைக்கு ஊட்டி அருளினாள்.
அன்னையின் கையால் ஞானப்பால் உண்டதனாலன்றோ வேதநெறி தழைத் தோங்கியது.
அன்பே சிவமாகியது.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**இலங்கை அரசியல் மாற்றம் தமிழரை வாழ வைக்குமா?**

அரசியல் மாற்றம் தமிழரை வாழ வைத்தாலும் தமிழன் தமிழனை வாழ விடமாட்டான்.
தமிழனுக்கு தமிழனைவிட பலமான எதிரி வேறு எவரும் இல்லை.
அதைத் தானே நாம் நாளாந்தம் அனுபவிக்கின்றோம்.

**கரிஸ் — மிருசுவில்**

**ஊழல் அரசியல்வாதிகளுக்கு, வயிற்றில் புளியை கரைக்குமே?**

பொதுத் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்கவின் கட்சி வெற்றி வாகை சூடுமாயின், நாட்டில் ஊழல் அரசியல்வாதிகள் கடுமையாகக் குறைவடைவர்.
ஆனால் கௌரவர் சேனை போல ஊழல் அரசியல்வாதிகளும் பலம் பெற்றல்லவா இருக்கிறார்கள்.எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போம்.

**சேயோன் — கொடிகாமம்**


**அநுர ஜனாதிபதியாகிய போது இந்தியாவின் மனநிலை எப்படியாக இருக்கிறது?**


கோட்டபாய ஜனாதியாக வெற்றிபெற்ற போது உடனடியாக டில்லிக்கு வருமாறு இந்தியா அழைப்பு விடுத்தது.
அந்த வரிசையில், அநுரகுமார திஸாநாயக்க வையும் இந்தியா டில்லிக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.
இதனையும் தாண்டி, அநுர ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் அவரை முதலில் சந்தித்த வெளிநாட்டுத் தூதுவர் சந்தோஸ்ஜா.
ஆக, வென்றவரை தன்வசமாக்கும் மூல மந்திரம் பிரதமர் மோடிக்கு நன்கு தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## சிங்கள மக்கள் அறிவாளிகள் அதனாலேயே அநுரகுமார...


வைத்திலிங்கம் நடராஜா


நாகமணி நாகேந்திரம்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

ஓய்வு பெற்ற சிரேஷ்ட அரச கணக்காளர் வைத்திலிங்கம் நடராஜா அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

அனலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராஜா அவர்கள் ஒரு சிறந்த மனிதர். எவரையும் மதிக்கின்ற பெருந்தன்மை கொண்டவர்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார்.

மாவை- கலட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்த நாகமணி நாகேந்திரம் அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து துயரடைகின்றோம்.

மற்றவர்களை மதிக்கின்ற மனிதநேயம் கொண்ட அவர் மக்கள் பணியை விருப்புடன் ஆற்றியவர். அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி, இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது.

அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அதுசரி, புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின்ர அதிரடி ஆட்டத்தில அரசியல்வாதிகள் அதிர்ந்து போயிருக்கினம்.

ஜனாதிபதியின் இந்தப் போக்கு நீடிக்குமோ அல்லது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிய அடங்கிப் போகுமோ.


**மூப்பர்:-** ஆடறுக்க முதல் சட்டியை நீட்டாதீங்க. எதையும் பொறுத்திருந்து தான் பார்க்க வேணும்.

**சாத்திரியார்:-** என்ன இருந்தாலும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மாளிகையைவிட்டு வெளியேறிய போது கொஞ்சம் மனதுக்குக் கஷ்ரமாகத் தான் இருந்தது.

**சிறாப்பர்:-** என்ன? சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:-** நாடு கந்தறுந்து காவடி எடுத்த போது, நாட்டைப் பொறுப்பெடுத்து வரிசை யுகத்தை இல்லாமல் செய்து ஏதோ இந்தளவுக்கு நாட்டைக் கொண்டு வந்த பெருமை ரணில் விக்கிரமசிங்க வைத்தானே சாரும்.

**மூப்பர்:-** உண்மை தான். ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அனுபவம், மொழி ஆற்றல், வெளிநாட்டு இராஜதந்திரிகளைக் கையாளுகின்ற திறமை என்பன இலங்கை நாட்டை மீண்டும் ஆளாக்கி நிறுத்துவதற்கு உதவியது என்பதை ஏற்றுத் தானாக வேண்டும்.



**பண்டிதர்:-** அப்ப ஏன் சிங்கள மக்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்கவில்லை.

**வாத்தியார்:-** பண்டிதர் ஐயா!இங்கு தான் சிங்கள மக்களின்ர அறிவாற்றலை நாங்கள் புரிந்து கொள்ள வேணும்.

2 ஆம் உலகப் போர் முடிவுற்ற பின்னர், பிரிட்டனில் நடந்த பொதுத் தேர்தலில் வின்சன் சேர்ச்சில் படுதோல்வி கண்டார்.

இரண்டாம் உலகப் போரை வெற்றிகரமாக நடத்திய வின்சன் சேர்ச்சில் பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற போது, அந்த நாட்டுப் பத்திரிகைகள் இந்த உலகில் பிரிட்டிஷ் மக்களைப் போல நன்றி மறந்தவர்கள் எவரும் இல்லை என எழுதின.

ஆனால் ஒரு பத்திரிகை, இந்த உலகில் பிரிட்டிஷ் மக்களைப் போன்ற அறிவாளிகள் எவரும் இல்லை என எழுதியது.

அதற்கு அந்தப் பத்திரிகை கொடுத்த விளக்கம் தான் இங்கு சிந்திப்பதற்குரியது.

அதாவது, போர்க்குணம் உடைய வின்சன் சேர்ச்சிலை மீண்டும் பிரதமராக்கினால், அவர் மீளவும் போர் மீதே மோகம் கொள்வார்.

ஆகையால போர்க்குணம் கொண்ட அவரை விலக்கி, நாட்டை நல்ல முறையில் நிர்வகிக்கக் கூடிய ஒருவரைப் பிரதமராக்குவதே பொருத்தம் எனப் பிரிட்டிஷ் மக்கள் நினைத்தனர் என அந்தப் பத்திரிகை எழுதியிருந்தது.

**சாத்திரியார்:-**வாத்தியார், இப்ப இதில இருந்து நீங்கள் என்ன சொல்லவாறியள்.

**வாத்தியார்:-** இஞ்சே சாத்திரியார் ரணில் விக்கிரமசிங்க, வரிசை யுகத்தை இல்லாமல் செய்தாலும் இந்த நாட்டைச் சூறையாடியவர்கள், ஊழல் புரிந்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க அவர் முன்வரவில்லை.

அதற்குக் காரணம் மகிந்த தரப்பின் ஆதரவில தான் ஜனாதிபதியாகியதால, அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கு ரணில் தயாரில்லை.

இந்த இடத்தில தான் சிங்கள மக்கள் ஊழலை ஒழிக்கவும் அரச சொத்துக்களைச் சூறையாடியவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பதற்கும் துணிந்த ஒருவர் தேவை என முடிவு செய்தனர்.

அந்த முடிவு தான் அநுரகுமார திஸாநாயக்கவை ஜனாதிபதியாக்கியது.

இவ்வாறு வாத்தியார் வைத்திலிங்கம் விளக்கம் கொடுத்ததும் ஆலடியில் அமைதி நிலவியது.

அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** நாங்கள் பொலிஸ் அதிகாரம் கேட்கிறம். அனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு மறுநாள் ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டதல்லோ.

அந்த வேளை, தீவகத்தில இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தவர்கள் திரும்ப ஊருக்குப் போவதற்கும் தீவகத்தில இருந்து யாழ். போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்ட நோயாளிகளை அங்கிருந்து பார்க்க வந்தவர்களையும் பண்ணை தாண்டட தமிழ்ப் பொலிஸார் அனுமதிக்கவில்லையாம்.

சிங்களப் பொலிஸார் அனுமதித்தாலும் அதனைத் தடுக்கும் வேலைகளில தமிழ்ப் பொலிஸார் ஈடுபட்டதாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தினம்.

இந்த இலட்சணத்தில பொலிஸ் அதிகாரம் எங்களுக்குக் கிடைத்தால் நிலைமை எப்படி இருக்கும்.

இவ்வாறு விதானையார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




இவர்களது குறிப்புகளிலிருந்து அக்காலக் கோட்டையின் நிலைமைகளை அறியமுடிகின்றது.

கோட்டைக்குள்ளிருந்த தேவலாயத்தில் இரு மணிகள் பிணைக்கப்பட்டிருந்தன. தேவாலயத்தின் உச்சியில் பிணைக் கப் பட்டிருந்த பெரியாலைய மணி ஒலித்து, நகரத்தில் குடியிருந்த பறங்கிகளை ஆராதனைக்கு வருமாறு அழைக்கும். பறங்கித் தெருவில் வாழ்ந்த சீமாட்டிகள் கதிரைப் பல்லக்குகளில் அமர்ந்து பல்லக்குக் காவிகளால் தூக்கி வரப்படுவர்.

கதிரைப்பல்லக்குகளில் தாங்கு கம்புகளில் தோள் பதித்து யாழ்ப்பாணத்து அடிமைகள் காவிவந்தனர். தேவாலயத்தில் சீமாட்டிகளை ஆராதனைக்கு இறக்கி விட்டு வழிபாடு முடியும் வரை வெளியில் கைகட்டிக் காத்திருந்தனர். தேவாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த சிறிய காண்டாமணி ஒலித்து கோட்டைக்குள் குடியிருந்த அதிகாரிகளையும், படை வீரர்களையும் வழிபாட்டிற்கு அழைக்கும்.

கோட்டைக்குள்ளிருந்த சிலுவை வடிவத் தேவாலயத்தின் சுவர்கள் நான்கு அல்லது ஐந்து அடிகள் தடிப்பானவை. தலையில் 2 அடிச் சதுரப் பொழிகற்கள் அற்புதமாகப் பதிக்கப்பட்டிருந்தன. பொதுவாக ஒல்லாந்தரின் கட்டடங்களில் இத்தகைய நில நேர்த்தியைக் காணமுடியும்.

மேலும் தூண்கள், வளைவுகள், கதவுகளின் சுற்றுநிலைகள் என்பன மஞ்சள் நிறமான மெல்லிய செங்கற்களால் அழகுபடுத்தப்பட்டிருந்தன. இவை இறக்குமதி செய்யப்பட்ட செங்கற்களாகவிருக்க வேண்டும்.

கோட்டைத் தேவாலயத்தின் தென் பக்கப்பகுதியில், வேலைப்பாடு நிறைந்த சில நினைவுக் கற்பொழிவுகள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று 1769 இல் இக் கோட்டையின் ஒல்லாந்தக் கம்மாந்தரான பிரெடெரிக் வில்கெம் என்பவனுடையதாகும். தலையில் அவனுடையதும் வேறு பலரினதும் கல்லறைக் கற்கள் காணப்பட்டன. அவற்றில் சில 1666 ஆம் ஆண்டிற்குரியன.

4 நவம்பர் 1679 கோட்டையின் கம்மாந்தர் தனது குதிரையில் ஏறிகோட்டைக்கு வெளியே உலாச் சென்றிருந்தான். அவனுக்கு முன்னும் பின்னும் அடிமைகளும் வீரர்களும் நடந்து சென்றனர். ஒல்லாந்தச் சீமாட்டிகள் இருவர் கதிரைகளில் அமர்ந்திருக்க அவற்றோடு பல்லக்கமைப்பில் பொருத்தப்பட்டிருந்த தாங்கு கொம்புகளில் தோள்பதித்து யாழ்ப்பாணத்து அடிமைகள் காவி வந்தனர்.

அவர்கள் சீதாரி (பறங்கித்தெரு)யிலிருந்து கோட்டைத் தேவாலயத்திற்கு வழிபாட்டிற்காகச் சென்று கொண்டிருந்தார்கள்.

(தொடரும்...)

---

# கடல் புறா

## குடிப் பழக்கம்




காலத்தின் பதிவு 126

“உண்டு சீனர்கள் கப்பல் மரத்தின் எடை அதிகம் ஆகவே வேகம் குறைவு பாரதத்தின் மரக்கலங்களில் மரத்தின் எடை குறைவு. ஆகவே வேகம் அதிகம். போரில் இரண்டுக்கும் இரண்டு வித உபயோகங்கள் உண்டு”

“சொல்லுங்கள் தேவரே!” “சீனக் கப்பல்களின் எடை அதிகமாதலால் போரில் எதிரிக் கப்பல்களுடன் மோதும்போது அவை எதிரிக்கப்பல்களுக்கு பெரும் சேதத்தை விளைவிக்கும். எதிரிக் கப்பல்களின் அடிப் பகுதியைச் துருவிச் சென்று துளை செய்துவிட நீண்ட இரும்பு ஆணியும் அவற்றின் அடியில் இருக்கும்.

பாரதத்தின் மரக்கலங்களில் மர எடை குறைவாதலால் மிகுந்த வேகத்துடன் பாய் விரித்துச் செல்லக் கூடியவை அவை.”

ஆகவே “இதை அக்ரமந்திரமாக்க உத்தரவு.” அக்ரமந்திரம்! அந்தப் பெயர் சுரீலென மஞ்சளழகியின் உள்ளத்தில் பாய்ந்தது, முந்திய இரவு அறிவிழந்த நிலையில் இளையபல்லவன் உளறிய சொற்களில் அதுவும் ஒன்று. அதைப் போர்க்கப்பலென்றும் இளைய பல்லவன் கூறியது மஞ்சளழகியின் நினைவுக்கு வரவே அவள் வியப்பின் வசப்பட்டாள்.

“ஆம்! என்னிடமும் கப்பல்களைப் பற்றி ஏதேதோ பெயர்களைச் சொன்னார்.” என்று வாய் விட்டுக் கண்டியத்தேவனிடம் கூறினாள்.

கண்டியத்தேவன் இமைகள் ஆச்சரியத்தால் உயர்ந்தன. “என்ன சொன்னார் தேவி” என்ற கண்டியத்தேவன் திடீரென ஏற்பட்ட ஆச்சரியத்தால் மகாராணிப் பட்டத்தை மறந்து பேசினான்.

“ஏதோ ஸர்ப்பமந்திரம், மத்திய மந்திரம், அக்ரமந்திரம் என்று சொன்னார்.” என்றாள் மஞ்சளழகி.

“வேறு என்ன சொன்னார்.” என்று கேட்டான் கண்டியத்தேவன் ஆவலோடு.

“தாரணி, லோலா, காமினி, தாரிணி, பேகினி... இன்னும் ஏதேதோ சொன்னார். எல்லாம் நினைவில் இல்லை.” என்று கூறினாள் மஞ்சளழகி.

கண்டியத்தேவன் முகம் ஆச்சரியத்தின் எல்லையைத் தொட்டது. “என்ன விந்தை இது!” என்று சொற்களையும் வியப்புடன் கொட்டினான். “எனக்கு ஏதும் புரியவில்லை. தேவி!” என்றும் சொன்னான்.

“என்ன புரியவில்லை?” “இளைய பல்லவர் குடிவெறியிலிருந்தார்.” “ஆம்.” “வெறியில் இத்தனை கோர்வையான பேச்சு எப்படி வரும்.” “என்ன கோர்வை அதில்?” “ஸர்ப்ப மந்திரமென்பது தளத்தின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடி வரை அறைகளை உடையது.

அரசர்கள் பொக்கிஷம், புரவிகள், ஸ்திரீகள், இவர்களை ஏற்றிச் செல்ல உதவுவது. மத்திய மந்திரம் கப்பலின் நட்டநடுவில் பெரும் அறையை உடையது. அரசர்களின் உல்லாசப் பயணத்துக்காக ஏற்பட்டது. அக்ர மந்திரம் கப்பலின் முனையில் அறையை உடையது. நீண்ட தூரப் பயணத்துக்கும், பெரும் கடற்போர்களுக்கும் உபயோகப்படுவது இத்தனை மரக்கலங்களில் அவர் அக்ரமந்திரமாக இதை மாற்ற உத்தரவிட்டிருக்கிறார். தேவி. அவர் உளறலிலும் பொருள் இருக்கிறது.”

மஞ்சளழகி கண்டியத் தேவனை ஏறெடுத்து நோக்கினாள். “என்ன பொருள் தேவரே?” என்று வினவினாள். “இந்த மரக்கலத்தை நீண்ட பயணங்களுக்கும், போர்களுக்கும். தேவையானபடி மாற்ற ஏற்பாடு செய்கிறார். இளையபல்லவர்,” என்றான் கண்டியத்தேவன்.

“அதனாலென்ன?” அதனாலென்னவா! அவர் பார்வை தொலைவில் இருக்கிறது. அக்ஷயமுனையில் அல்ல கண்ணோட்டம்.” பின் எங்கே?”


எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஓர் அபாயமிருக்கிறது தேவி.” என்ன அபாயம்?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விந்தை உலகம்

அசல் போலியாகவும்
போலி அசலாகவும்
அன்பு அடிமையாகவும்
அடிமை அன்பாகவும்
ஆணவம் அடக்கமாகவும்
அடக்கம் ஆணவமாகவும்
உண்மை பொய்யாகவும்
பொய் உண்மையாகவும்
காயை கனியாகவும்
கனியை காயாகவும்
நல்லதை கெட்டதாயும்
கெட்டதை நல்லதாகவும்
பணிவதனை பயமாகவும்
பயமதனை பணிவாகவும்
பாசத்தை வேஷமாகவும்
வேஷத்தை பாசமாகவும்
இப்படி எல்லாமே எதிர்மறையாய்
மாறியது இவ் விந்தை உலகில்



சி.மகாலட்சுமி, கொக்குவில்.

# வாழ வாழ்த்த வேணும்



செம்பருத்தி போலிணைந்து வாழ வேணும்
சிந்தை இருவர் படகுபோல இணைய வேணும்
எந்தையர் தம் வாழ்க்கை பேணி வாழ வேணும்என்றும்
சிந்தை நொந்து போகாத நிலை காண வேண்டும்

கள்ளமில்லா காதல் வாழ்வில் இணைய வேணும்
அள்ளி வைத்த அல்லி போல மலர வேணும் வாழ்வில்
இல்லை இல்லை என்று துயர் ஓட வேணும் பெரும்
இன்ப நிலை என்றும் சேர்ந்து வாழ வேண்டும்

செந்தமிழும் சிந்தை நிறைந்து வாழ வேணும் அன்பு
சிந்தையர் போல் பெரிய வாழ்வு பேண வேண்டும்
என்றும் இன்பம் கண்டு காதலாகி மனது நிறைய வேணும்
என்றும் இன்பம் கண்டு வாழ்வை ஓட்ட வேணும்

அன்பை அன்றி வேறு ஏதும் அறிந்திடாது
இன்ப நிலை கண்டு நாளும் வாழ வேண்டும் அன்பு
சிந்தை தன்னில் தேன் சுரந்து வாழ வேணும் வாழ்க
வாழ்க இவர் போல் என்று வாழ்த்த வேணும்

இன்பம் இன்பமென்று கூறி வாழ வேண்டும்
என்றும் இவர் போல என்று வாழ்த்த வேணும்
நன்று நன்று என்று கூறி வாழ்த்த வேணும்
நாளும் இவர் போல என்று வாழ்த்த வேணும்

வளவை வளவன்.

# என் தமிழே

சொல் நயத்தில் சுழியோடி
சுருதி தனை தீட்டி
மெல்லினமும் வல்லினமும்
பேரவி ஒரு உருவேற்றி
இலக்கணத்தை இருப்பாக்கி
இலக்கியத்தில் களைபோட்டு
நல்ல தமழ் மூவேந்தர் வழி வந்த
என் தமிழே
தமிழாற்றுப் படை கொண்டு
தரணி வீறு நடைகொண்டு
மண்தொன்று முன் தோன்றி
மூத்த மொழிச் செந்தமிழே
உன்னால் பிரசவித்த எம்மைப்
பெருமை என்றோம்
அருமைத்தமிழ் மறந்து
அழவிய மாற்று மொழி
உன் உருவத்தை குலைக்கயிலே
பொறுமை இழந்து பொய்த்திடவே
எந்தன் மொழி
தருமத்தின் தாயாகி
வரும் பகைக்கு விரோதியாகி
வாழ் கொண்டு வேல் கொண்டு
வள்ளுவனின் வதனம் கொண்டு
பல் மதமும் பார் உருவில்
முதல் உதித்த என் தமிழே
நீ பரிதவித்து வீழலாமோ
நாமும் அதை வீழ்த்தலாமோ?

யாழ் வாகீஷ்

# மௌனத்தின் தேடல்- 732



## என் இனிய நண்பனே

என் இனிய நண்பனே!
பெற்கரிய பெருவாழ்வு
வாள் வீச்சில் இல்லை
எவ்வுயிரும் நின்னுயிராக்கி
போற்றும் ஓர் வாழ்வு
கனியென இனிதாகும்
உன் சொல் வீச்சில் உண்டு

கவிஸ், நவ்லூர்.

## என்று உணர்வீர்?

இளம் தலைமுறையே!- நீ
என்றும் தலைதூக்காதே
மிருகத்தனம் காட்டி
அழிந்து போ என்ற
ஆதிக்கவாதிகளின் கட்டவிழ்ப்பை
கட்டமிட்டுக்காட்டும் படமிதுவென்று
காளையரே! என்றுணர்வீர்?

பன்னீர்ச்செல்வம், நாவலர் வீதி.

## கத்தியை வீசாதே புத்தியை வீசு

உயிர் பெரும் விலை மதிப்பிற்கு
நிகரான ஒன்று
கொலை பஞ்சமா பாதகச்
செயலில் ஒன்று
கத்தியை வீசி உயிர் எடுக்கும்
இந்த பாதகச் செயல் ஏன்?
பழியைச் சுமக்கவா?
வாழ்வை அழிக்கவா?
கத்தியை வீசாதே
உன் புத்தியை வீசு
சமுதாயத்திற்கு நல்லன செய்
எதிர்காலம் உன்னைப் போற்றும்
உன் வாழ்வும் சிறக்கும்

அபி-குமைாலிகா,
சித்தன்கேணி.

## வாழு வாழ விடு

திட்டமிட்டுப் பெருகும் செயல்களால் நாட்டின்
சட்டமும் ஒழுங்கும் சீர்கெட்டுப்
போனதால் நாளும் பொழுதும்
வாட்டும் சோகமும் தொடர்வதற்கு
ஆட்டம் போடவைக்கும் போதைப்பொருட்
பாவனையும் காரணமாகும்
தேட்டம் தேட வைக்க
கூலிப்படையாவதையும்
காட்டு மிராண்டித்தனத்தைத் தடுக்கவும்
ஆன்மீகமும் விழித்தெழுந்து நிமிர்ந்து
நின்று வழி காட்ட வேண்டும்

[illegible]

# மௌனத்தின் தேடல்- 733



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## இனமும் குலமும்

வாள் எடுத்து வீசினால்
வீரம் என்று நினைத்து விடாதே!
உன் வாள் வீச்சினால்
இனம் வாழ வேண்டுமே தவிர
குலம் வாளாவெட்டி ஆகக் கூடாது.

துணவியூர் நடா.

## இன்றைய இளைஞர்


இன்றைய இளைஞர்- என்ற
ஓவியத் தலைப்பிற்கு தீட்டப்பட்ட ஓவியமிது
கேவலம் தம் கடன் மறந்து
வாள்காட்டி மார்பு தட்டும்
இளைஞர் இல்லச்சுவர்களில்
இதுவே இனித் தொங்கும்

ஜஸ்விணி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : பணம் படைத்தவன்
பாடியவர் : T.M.சௌந்தரராஜன்
பாடல் வரிகள் : கண்ணதாசன்
இசை : M.S.விஸ்வநாதன்.



கண் போன போக்கிலே கால் போகலாமா
கால் போன போக்கிலே மனம் போகலாமா

கண் போன போக்கிலே கால் போகலாமா
கால் போன போக்கிலே மனம் போகலாமா
மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா
மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா
மனிதன் போன பாதையை மறந்து போகலாமா
மனிதன் போன பாதையை மறந்து போகலாமா

கண் போன போக்கிலே கால் போகலாமா
கால் போன போக்கிலே மனம் போகலாமா

நீ பார்த்த பார்வைகள் கனவோடு போகும்
நீ சொன்ன வார்த்தைகள் காற்றோடு போகும்
நீ பார்த்த பார்வைகள் கனவோடு போகும்
நீ சொன்ன வார்த்தைகள் காற்றோடு போகும்
ஊர் பார்த்த உண்மைகள் உனக்காக வாழும்
உணராமல் போவோர்க்கு உதவாமல் போகும்
உணராமல் போவோர்க்கு உதவாமல் போகும்

கண் போன போக்கிலே கால் போகலாமா
கால் போன போக்கிலே மனம் போகலாமா

பொய்யான சில பேர்க்கு புது நாகரீகம்
புரியாத பல பேர்க்கு இது நாகரீகம்
முறையாக வாழ்வோர்க்கு எது நாகரீகம்
முன்னோர்கள் சொன்னார்கள் அது நாகரீகம்
முன்னோர்கள் சொன்னார்கள் அது நாகரீகம்

கண் போன போக்கிலே கால் போகலாமா
கால் போன போக்கிலே மனம் போகலாமா

திருந்தாத உள்ளங்கள் இருந்தென்ன லாபம்
வருந்தாத உருவங்கள் பிறந்தென்ன லாபம்
இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்
இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்
இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்

கண் போன போக்கிலே கால் போகலாமா
கால் போன போக்கிலே மனம் போகலாமா

# இன்னும் அடங்காத இஸ்ரேலின் ரத்தவெறி

## லெபனானிலும் கொல்லப்படும் அப்பாவிகள்!

ஹமாஸ் படையைக் குறி வைப்பதாகக் கூறி, காசாவில் ஆயிரக்கணக்கான அப்பாவிகளைக் கொன்று குவித்த இஸ்ரேல் இராணுவம், தற்போது ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு எதிராகத் தாக்குதல் நடத்துவதாகச் சொல்லி லெபனானிலும் குழந்தைகள், பெண்கள் உட்பட சுமார் 550 பேரைக் கொன்று குவித்திருக்கிறது. வெளிநாட்டவர்களை லெபனானிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு எச்சரிக்கும் அளவுக்கு அங்கு நிலைமை மோசமாகியிருக்கிறது!

அரசியல் சக்திவாய்ந்த ஷியா முஸ்லிம் அமைப்பான ஹிஸ்புல்லா உருவாகக் காரணமே, 1982 இல் லெபனானை நோக்கிய இஸ்ரேலின் படையெடுப்புதான். ஈரானின் உச்சபட்ச தலைவர் அயதுல்லா கொமேனியின் வழியைப் பின்பற்றி, சில இஸ்லாமிய மதகுருமார்கள் ஒன்றிணைந்து ஹிஸ்புல்லா ஆயுதக் குழுவைத் தொடங்கினார்கள்.

1985 இல் அதிகாரபூர்வக் கொள்கைகளை வகுத்து, வலுவான அமைப்பாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது ஹிஸ்புல்லா. இஸ்ரேல் மட்டுமன்றி, பல மேற்கத்தேய நாடுகளும், கட்டார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட வளைகுடா நாடுகளும் ஹிஸ்புல்லாவைப் பயங்கரவாத அமைப்பாகக் கருதுகின்றன. அதே வேளையில், ஈரானின் ஆயுத, நிதியுதவிகளும், சிரியாவின் அரசியல் ஆதரவும், காசா, ஈராக், ஏமன் நாடுகளின் ஆதரவும் ஹிஸ்புல்லாவுக்கு இருக்கிறது.

1992 இலிருந்து லெபனானில் அரசியல் சக்தியாகவும் மாறிய ஹிஸ்புல்லா, தேர்தலில் போட்டியிட்டு, பாராளுமன்றத்திலும் தங்கள் இருப்பை உறுதி செய்தது. இதற்கிடையே பல ஆண்டுகளாக தெற்கு லெபனானை ஆக்கிரமித்து வைத்திருந்த இஸ்ரேல், 2000 ஆம் ஆண்டில் அங்கிருந்து வெளியேறியது. இந்த வெளியேற்றத்தில் ஹிஸ்புல்லா அமைப்புக்கும் முகக்கியப் பங்கு உண்டு. அப்போதிலிருந்து தெற்கு லெபனானிலுள்ள இஸ்ரேல் எல்லையில் படைகளைக் குவிக்கத் தொடங்கிய ஹிஸ்புல்லா 2006 ஆம் ஆண்டில் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. பதில் தாக்குதலுக்காக தெற்கு லெபனானுக்குள் மீண்டும் நுழைந்த இஸ்ரேல், ஹிஸ்புல்லாவினர் பலரைக் கொன்றது. அந்தத் தாக்குதலில் ஹிஸ்புல்லா துவண்டு போனாலும், இப்போது லெபனான் இராணுவம், ஹமாஸ் படை ஆகியவற்றைவிட வலிமை மிக்க ஆயுதப்படையாகத் திகழ்கிறது ஹிஸ்புல்லா. தற்போது ஹிஸ்புல்லா வசம் சுமார் இரண்டு லட்சம் ராக்கெட் லாஞ்[illegible] தாகச் சொல்கிறது `Center for Strategic and International Studies' என்ற அமைப்பு. 1992-ஆம் ஆண்டு முதல் ஹிஸ்புல்லாவின் தலைவராக இருக்கும் ஹசன் நஸ்ரல்லா, தங்கள் வசம் ஒரு லட்சம் வீரர்கள் இருப்பதாகச் சொல்கிறார். இஸ்ரேலால் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் தலைமறைவாக இருக்கும் நஸ்ரல்லா வாரம்தோறும் தொலைக்காட்சியில் தோன்றி உரை நிகழ்த்துவதை வழக்கமாகவைத்திருக்கிறார்.

### கொல்லப்பட்ட படைத் தளபதி!

கடந்த ஆண்டு, ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடங்கியது. அதற்கு அடுத்த நாளே இஸ்ரேல் எல்லையில் துப்பாக்கிச்சூடு நடத்தியது ஹிஸ்புல்லா. அன்று தொடங்கி 11 மாதங்களாக இரு தரப்புக்கும் இடையிலான மோதல் அதிகரித்துக்கொண்டே சென்றது. இந்த நிலையில், கடந்த மாதம் ஹிஸ்புல்லாவின் படைத் தளபதி ஃபுவாத்ஷுக்ர் கொல்லப்பட்டதாகச் செய்திகள் வெளியாகின. எங்கள் தளபதியைக் கொன்ற இஸ்ரேலுக்குத் தக்க பதிலடி கொடுப்போம்' எனச் சூளுரைத்த ஹிஸ்புல்லா நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை இஸ்ரேலை நோக்கி ஏவியது.

உலகின் பவர்ஃபுல் வான் பாதுகாப்பு அமைப்பான 'அயர்ன் டோம்' மூலம் பெரும்பாலான ஏவுகணைகளைத் தடுத்து நிறுத்தியது இஸ்ரேல். அதனால், அங்கு பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது. இதைத் தொடர்ந்தே ஹிஸ்புல்லா அமைப்பினரை முற்றிலுமாக ஒழித்துக்கட்டும் முயற்சியில் இறங்கியது இஸ்ரேல்.

கடந்த வாரம் ஹிஸ்புல்லாவினர் பயன்படுத்தும் தொலைத்தொடர்பு சாதனங்களான பேஜர்கள், வாக்கி டாக்கிகளை வெடிக்கச் செய்து 30இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். இது குறித்து இஸ்ரேல் வாய் திறக்கவில்லையென்றாலும் அவர்கள்தான் இதைச் செய்திருக்க முடியும் என அடித்துச் சொன்னது ஹிஸ்புல்லா. இதைத் தொடர்ந்து இரு தரப்புக்குமிடையே தாக்குதல்கள் தொடங்கியிருக்கின்றன. இதில், லெபனானைச் சேர்ந்த 35 குழந்தைகள், 58 பெண்கள் உட்பட 550இற்கும் அதிகமானோர் கொல் லப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, "ஹிஸ்புல்லாவினருக்கு யாரும் அடைக்கலம் கொடுக்க வேண்டாம்" என்று லெபனான் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருக் கிறார். இதனால், ஹிஸ்புல்லா கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதியிலிருந்து வெளியேறி வடக்குப் பகுதிகளில் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள் பொது மக்கள்.

### நெதன்யாகு இன்னொரு போரா? குமுறும் இஸ்ரேல் மக்கள்!

போரை நிறுத்தி, ஹமாஸ் படையிடமிருக்கும் இஸ்ரேலியப் பணயக் கைதிகளை மீட்டு வாருங்கள என்ற கோரிக்கையுடன் போராடி வரும் இஸ்ரேல் மக்கள், "ஹமாஸ்"டனான போரே வேண்டாம் என்கிறோம். ஆனால், தற்போது லெபனானுடன் புதிய போரைத் தொடங்கியிருக்கிறார் நெதன்யாகு. பல நாடுகளையும் பகைத்துக் கொண்டிருப்பதால் நாங்கள் அச்சத்துடன் வாழ வேண்டியிருக்கிறது' என்று குமுறுகிறார்கள்.

"தொடர்ந்து சர்வதேசப் போர் விதிகளை மீறிக் கொண்டிருக்கும் இஸ்ரேலை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. அமெரிக்கா தொடர்ந்து இஸ்ரேலுக்கு உதவிக் கொண்டிருக்கிறது. இந்தியாவும் இஸ்ரேலுக்கு எதிரான ஐ.நா தீர்மானங்களைப் புறக்கணிக்கிறது. கண்டனங்களையும் தீர்மானங்களையும் தாண்டி தன்னை யாரும் எதுவும் செய்துவிட முடியாது என்ற தைரியத்தில்தான் நெதன்யாகு போர் வெறியுடன் அப்பாவி மக்களைக் கொல்கிறார்" என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.

சக்திவாய்ந்த உலக நாடுகள் வேடிக்கை பார்ப்பதை நிறுத்திவிட்டு, களத்தில் இறங்கினால் மட்டுமே இஸ்ரேலின் அகங்காரம் அடங்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

418

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## வைத்தியரைச் சந்திக்கும் போது...

வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய ஒரு நிலை ஏற்படும் பொழுது நாம் எமது மருத்துவம் சம்பந்தமான குறிப்புக்கள், துண்டுகள், புத்தகங்கள், சோதனை முடிவுகள் அனைத்தையும் எம்முடன் எடுத்துச் செல்ல வேண்டும். அவை எமக்குப் பொருத்தமான மருத்துவப் பராமரிப்பை தீர்மானிப்பதற்கு பெரிதும் உதவியாக இருக்கும். இவற்றை எடுத்துச் செல்ல நாம் தவறினால் எமக்குப் பொருத்தமான சிகிச்சையை ஆரம்பிப்பதில் தாமதங்கள் ஏற்படலாம். சில முக்கியமான ஆவணங்களை போட்டோ பிரதி எடுத்து வைத்துக் கொள்வது எமது மருத்துவ தகவல்கள் தொலையும் சந்தர்ப்பங்களில் மிகவும் பயனுடையதாக அமையும்.

மருத்துவப் பராமரிப்பு சம்பந்தமான சகல ஆவணங்களையும் பைல்கவரில் போட்டு பாதுகாப்பாக வைத்திருப்பது அவசியமாகும். வைத்தியர் சோதிக்கும் கருவியை (ஸ்ரெதஸ்கோப்) காதில் மாட்டியிருக்கும் பொழுது அவருடன் பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும். காரணம் அந்தச் சந்தர்ப்பத்தில் நாம் கதைப்பது வைத்தியருக்குக் கேட்காது. நாம் கதைத்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்தக் கருவியினால் உங்களை சோதித்துப் பார்ப்பதும் கடினமாக இருக்கும்.

எமது நோய் நிலை சம்பந்தமாக நாமே வைத்தியருக்கு விபரிப்பது நல்லது. எமக்கு இருக்கும் உண்மையான சரியான அறிகுறிகளை எம்மால் மட்டுமே முழுமையாக விபரிக்க முடியும். அதாவது ஒரு நோயாளியின் நோய் நிலை சம்பந்தமாக அவரின் குடும்ப உறுப்பினர்கள் விபரிப்பதிலும் பார்க்க அந்த நோயாளியே நேரடியாக வைத்தியருக்கு சொல்வது சிறந்தது. நோயாளிக்கு பேசும் ஆற்றலில் அல்லது சிந்திக்கும் ஆற்றலில் தடுமாற்றங்கள் இருந்தால் அல்லது மயக்க நிலை, வலிப்பு நிலை ஏற்பட்டால் குடும்ப உறுப்பினர்கள் அவரின் நிலை சம்பந்தமாக விபரிக்க வேண்டிய தேவை ஏற்படலாம். நாம் பாவித்துக் கொண்டிருக்கும் மாத்திரைகளின் பெயர்களை அறிந்து வைத்திருப்பது மிகவும் அவசியமாகும். மாத்திரைகளின் நிறத்தையும் வடிவத்தையும் சொல்லி அதனை அடையாளப்படுத்த முனைவது சில சமயம் ஆபத்திலும் முடியலாம்.

ஒவ்வொரு வகையான மாத்திரைகளும் பல்வேறுபட்ட வடிவங்களிலும் நிறங்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே நீங்கள் குறிப்பிடும் வடிவத்தையும் நிறத்தையும் வைத்து நீங்கள் என்ன மாத்திரை பாவித்துக்கொருக்கிறீர்கள் என்பதை வைத்தியரினால் கண்டறிவது சிரமம்.

வைத்தியரைச் சந்திக்கும் போது நாம் எமது நோய் நிலை சம்பந்தமான சகல தகவல்களையும் கேட்டுத் தெரிந்து கொள்வது அவசியமாகும். உதாரணமாக எமக்கு என்ன நோய்கள் இருக்கின்றன? எங்கள் குருதி அமுக்கம் எவ்வளவு? ஒவ்வொரு மாத்திரைகளும் எதற்காக தரப்படுகின்றன? அவற்றின் பெயர் என்ன? செய்யப்பட்ட சோதனையின் முடிவு என்ன? உணவு முறை எப்படி அமைய வேண்டும்? என்னவகையான உடற்பயிற்சிகள் செய்ய முடியும் போன்ற வினாக்களுக்கான விடைகளைத் தெரிந்து கொள்வது எமது உரிமையும் கடமையுமாகும்.

சிறிய மருத்துவப் பிரச்சினைகளுக்கும் மருத்துவ நிபுணரை சந்திக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எமது வீட்டின்அருகில் உள்ள அரசாங்க வைத்தியசாலையில் வைத்தியரை சந்திக்க முடியும். தேவை ஏற்படின் மேலதிக சிகிச்சைக்கான ஒழுங்குகளை அந்த வைத்தியர் செய்து தருவார்.

வைத்தியர் கூறும் சிகிச்சை முறைகளையும் ஆலோசனைகளையும் ஏற்றுக்கொள்வது எமக்கு



கஷ்டமாக இருந்தால் அதனை திறந்த மனதுடன் வைத்தியருக்கு நாம் தெரியப்படுத்த வேண்டும். அப்படியான சந்தர்ப்பங்களில் மாற்று வழிகள் பற்றி ஆராய்வார். வைத்தியர் கூறுவது ஆலோசனையே தவிர உத்தரவு அல்ல. எமது விருப்பத்திற்கு அமைவாகவும் எமது அனுமதியுடனும் மட்டுமே சிகிச்சை முறை இறுதியில் வடிவமைக்கப்படும். எனவே வைத்தியரின் ஆலோசனையைக் கேட்டபின் எமது விருப்பத்தையும் தீர்மானத்தையும் வைத்தியருக்கு தெரியப்படுத்துவது எமது உரிமையும் கடமையும் ஆகும்.

மருந்துகளை மருந்தகங்களில் வாங்கும் போது அதனைப் பாவிக்கும் முறை பற்றியும் கேட்டறிதல் வேண்டும். மருந்து காலாவதியாகும் திகதியையும் பார்த்து வாங்குதல் வேண்டும். எமக்கு இருக்கும் அறிகுறிகளை கூட்டியோ மறைத்தோ, அல்லது குறைத்தோ வைத்தியருக்கு தெரியப்படுத்தினால் அது எமது வைத்திய முறையில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

எனவே வைத்தியரை எமது நண்பராகக் கருதி உண்மை நிலையை அவருக்கு தெரியப்படுத்துவது நல்லது. எமது மருத்துவத் தகவல்களின் இரகசியத்தன்மை எப்பொழுதும் வைத்தியர்களால் பேணப்படும். ஒவ்வொரு நோயுடனும் போராடி வெற்றி பெற்று ஆரோக்கியமாக வாழ முயற்சி எடுப்போம்.

**Dr. சி.சிவன்சுதன்,**
**பொது வைத்திய நிபுணர்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

---

மெய்கள் பொய்த்துக்கொண்டிருக்கின்றன. இரவுகள் கூட பகல்போல் ஆகி பந்தல்போட்டுத் திருவிழா காணும். கோயில்கள் இருந்த ஊரெங்கும் சாமத்திலும் களைகட்டும் சாராயக் கடைகள் முளைவிட்டமை எப்படி. படித்துப் பெயர் எடுத்த பரம்பரையில் உதித்தவர்கள் குடித்துக் குழுமுழுகிப் போகத் துணிந்தது எப்படி? இந்தக் கடைகளால் பொய்த்துப் போய்க்கொண்டிருக்கும் மேனிகள் எத்தனை? வாகனங்கள் புகையூதக்கூடாது என்று எத்தனை எத்தனை தடைகள் எல்லாம் போட்டோம்.

ஆனால் வாய்கள் புகையூத வாங்கிப் புகைப்பதற்கு எத்தனை கடைகள் போட்டு வைத்திருக்கிறோம் உயிர் குடிக்கும் சிகரெட்டை வாங்கவும் விற்கவும் தடைபோட எமக்கு நாதி இல்லாமல் போனது ஏன். புகையில் கருகும் மேனியைக் காப்பாற்றிக்கொள்ள எமக்கு துப்பில்லாமல் போனது ஏன்? உடம்பு என்ற மெய்யையும் ஆன்மா என்ற உயிரையும் ஆரோக்கியமாக ஓட்டவைக்க என்ன செய்யவேண்டும் என்று எல்லோரிடமிருந்தும் ஆலோசனைகள் வந்தவண்ணமே இருக்கின்றன. இதில் யார் சொல்வதைக் கேட்பது? எது உண்மை பக்கத்து வீட்டு அம்மா சொல்வது மெய்யா, டொக்டர் ஐயா சொன்னது பொய்யா? முன்வீட்டு அம்மம்மா செய் என்று சொன்னதை செய்யாமல் விடலாமா? விளம்பரங்களைச் மெய் யென்று நம்பவா? எப்பொருள் யார் யார் வாய் கேட் பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்ற அருள்வாக்கியம் புரியாமல் போனதால், பல மெய்கள் பொய்த்துக்கொண்டிருக்கின்றன.

யேசுநாதரின் மெய் சிலுவையில் அறையப் பட்டபொழுதுகூட உண்மை மடிந்துவிட்டதாக யாரும் கருதவில்லை. தோல்விபோன்ற அந்தத் தோற்றப்பாடுதான் பின்னர் பெரு வெற்றிக்கு வழிசமைத்தது. நம்பிக்கையுடன் எம்மெய்களைக் காப்பாற்ற என்ன செய்யப்போகிறோம்? உடல், உள, சமூக, ஆன்மீக நன்னிலை என்ற மெய்யின் மெய்ப்பொருளை எங்கே தேடப்போகிறோம்? இது சம்பந்தமாக சிந்திக்கவும் செயற்படவும் நிறைய இடம் இருக்கின்றது.

**Dr சி. சிவன்சுதன்,**
**பொதுவைத்திய நிபுணர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளின் நிகழ்வுகளுக்கு பணம் வசூலிக்க தடை

## அமைச்சு அறிவிப்பு

**(கொழும்பு)**

**பாடசாலைகளில் முன்னெடுக்கப்படும் பல்வேறு நிகழ்வுகளின் போது பெற்றோர்களிடம் பணம் வசூலிக்கக் கூடாது என கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு அறிவித்துள்ளது.**

பாடசாலைகளில் சிறுவர் தினம், ஆசிரியர் தினம் உள்ளிட்ட பல்வேறு விழாக்களை கொண்டாட பெற்றோர்களிடம் பணம் வசூலிப்பதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே. எம். திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதனால், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் அதிகம் பாதிக்கப்படுவதுடன் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே பாடசாலைகளில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதவாறு அதிபர்கள் உறுதியளிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதன் படி, இதுபோன்ற நிகழ்வுகளை நடத்துவதற்காக பெற்றோரிடம் பணம் வசூலிக்கக் கூடாது என மாகாணக் கல்விச் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டப் பணிப்பாளர்கள், அரசாங்க அதிபர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் மற்றும் அதிபர்களுக்கு கடிதம் மூலம் செயலாளர் மேலும் அறிவித்துள்ளார். (நி)

## கட்டுப்பணம் செலுத்திய சுயேட்சை குழு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக சுயேட்சைக் குழுவொன்று கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளது.

இந்த வருட பொதுத் தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்தும் முதலாவது குழு இதுவாகும் என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ. எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள், உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் பிரதி ஆணையாளர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டது.பாராளுமன்ற தேர்தல் செலவு குறித்து இறுதி உடன்பாடு எட்டப்படும் என்று கூறப்படுகிறது.

பாராளுமன்றத் தேர்தலுக்காக 11 பில்லியன் ரூபா செலவிடப்படும் என தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஆட்சிமாற்றம் காரணமாக பதவி விலக வேண்டியதில்லை

### மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

ஆட்சிமாற்றம் காரணமாக பதவி விலக வேண்டியதில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஆட்சி மாற்றமடைந்ததன் காரணமாக சுயாதீனமாகச் செயற்படும் மத்திய வங்கி ஆளுநரும் நிதிச் சபையும் மாற வேண்டியதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிதிச் சபையின் உறுப்பினர்களது தனிப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் பதவி விலகலாம். எனினும் பொதுவாக அவ்வாறு பதவி விலக வேண்டிய அவசியமில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். புதிய மத்திய வங்கி சட்டத்தின் கீழ் நிதிச்சபை மற்றும் ஆணையாளர் குறிப்பிட்ட காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவிக் காலத்தில் உச்ச அளவில் சேவையை வழங்கும் பொறுப்பு தமக்கு உண்டு எனக் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஜனாதிபதியின் திட்டங்கள் வரவேற்கத்தக்கவை - காஞ்சன



(கொழும்பு)

உரமானியம் அதிகரிப்பு உட்பட பல அரசாங்க முயற்சிகள் மீள ஆரம்பிக்கப் பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என முன்னாள் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

புத்துயிர் பெற்ற கொள்கைகளில் உரமானியத்தை 15,000 ரூபாயில் இருந்து 25,000 ரூபாயாக அதிகரிப்பது, மீனவர்களுக்கு எரிபொருள் மானியத்தை அறிமுகப் படுத்துவது போன்ற விடயங்கள் அடங்குமெனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கீழ் இந்த திட்டங்கள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் விஜேசேகர தெரிவித்தார். ஆரம்பத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட இந்தத் திட்டங்கள் ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இடைநிறுத்தப்பட்டதாக விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 150 | 100-150 | 160 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200-250 | 300 |
| தக்காளி | 300 | 180 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 220 | 150-200 | 240 |
| கோவா | 350 | 300 | 260 | 400 |
| கரட் | 250 | 300 | 250 | 300 |
| பூசணி | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 150 | 120 | 100 | 300 |
| வாழைக்காய் | 220 | 200 | 200-250 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 250 | 150-300 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 300 | 290 | 300 |
| பாகற்காய் | 450 | 400 | 350 | 600 |
| வெண்டக்காய் | 120 | 100 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 150 | 300 |
| பயற்றங்காய் | 600 | 300 | 450 | 500 |
| லீக்ஸ் | 400 | 400 | 200 | 400 |
| பீற்றூட் | 150 | 180 | 150 | 200. |
| கறிமிளகாய் | 550 | 600 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 750 | 700 | 600-700 | 800 |
| போஞ்சி | 450 | 500 | 250 | 450 |
| கத்தரிதம்புள்ள | 130 | 200 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 600 | 400 | 400-450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 140 | 130 | 80-140 | 100-140 |
| இராசவள்ளி | 900 | 650 | 580 | 1200 |
| வெங்காயப்பூ | 600 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 140 | 150 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 50 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | -- | 100 | -- | 160 |

## அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை வெளியிட ஆலையாளர்கள் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையின் கீழ் அரிசியை சந்தைக்கு வெளியிட பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.குறித்த விடயத்தை அரலிய குழுமத்தின் தலைவர் டட்லி சிறி சேன நேற்று அறிவித்துள்ளார்.

மேலும் இது குறித்து அவர் தெரிவித்ததாவது நாட்டில் ஜனாதிபதி ஆற்றிவரும் பணிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், இன்று முதல் அனைத்து அரிசி வகைகளையும் கட்டுப்பாட்டு விலையில் வர்த்தகம் செய்ய தீர்மானித்துள்ளோம்.நிபுன குழுமத் தலைவர் மற்றும் நிவ்ரத்ன குழும தலைவர் ஆகியோரிடமும் கலந்துரையாடினேன். அவர்களும் இதற்கு இணக்கம் தெரிவித்தனர்.


இன்று முதல் அரிசியை அரசாங்கக் கட்டுப்பாட்டு விலையில் விற்கும் வகையில் எங்கள் அரிசியை விடுவிப்போம் என்று ஒட்டுமொத்த வர்த்தக சமூகத்திடமும் கேட்டுக் கொள்கிறேன்.ஜனவரி 20 வரை மட்டும் இந்த ஆதரவு வழாங்கப்படும் என தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்டார் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர்

**(பெய்ரூட்)**

**ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா இஸ்ரேலிய இராணுவ தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.**



பெய்ரூட் பகுதியில் நடந்த தாக்குதலில் ஹிஸ்புல்லா தலைவர் நஸ்ரல்லா கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் நேற்று முன்தினம் வான்வழித் தாக்குதலை நடத்தியதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. பெய்ரூட்டில் உள்ள ஹிஸ்புல்லாவின் தலைமையகத்தை குறிவைத்து வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் ஹரேக் ஹ்ரீக் புறநகர் பகுதியில் உள்ள 6 கட்டடங்கள் இடிந்ததாக கூறப்படுகிறது.

இது இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையிலான மிக முக்கியமான தாக்குதல்களில் ஒன்றாகத் தெரிவிக்கப்படுகிறது.

நஸ்ரல்லாஹ் 30 வருடங்களுக்கும் மேலாக ஹிஸ்புல்லாஹ்வை வழிநடத்தி வந்ததாகக் கூறப்படுகிறது.

ஹசன் நஸ்ரல்லாஹ் 1960 இல் பெய்ரூட்டின் போர்ஜ் ஹம்மூத் பகுதியில் பிறந்தார். மேலும் அவர் ஒன்பது குழந்தைகளில் மூத்தவர் என்று கூறப்படுகிறது.

லெபனானில் உள்நாட்டுப் போரின் போது அவரது அரசியல் பயணம் தொடங்கியது. (நி)

## இஸ்ரேல் பிரதமருக்கு எதிராக நியூயோர்க்கில் போராட்டம்!

(வோஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக இஸ்ரேலிய பிரதமர் நியூயோர்க்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், அவருக்கு எதிராக பாலஸ்தீன ஆதரவாளர்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக இஸ்ரேலிய பிரதமர் பென்சமின் நெதன்யாகு நியூயோர்க்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையில், ஐ.நா. தலைமையகத்திற்கு முன்பாக இஸ்ரேல் பிரதமருக்கு எதிராக நேற்று முன்தினம் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன கொடிகளையும் பாதாதைகளையும் இஸ்ரேல் பிரதமரின் உருவப் படங்களையும் ஏந்தியவாறு இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், சிறுவர்களை கொலை செய்வதை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்றும் பணயக் கைதிகளை காப்பாற்ற இராணுவத்தின் ஊடாக அன்றி அரசியல் ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

பிரதானமாக இரண்டு தரப்புக்கும் இடையே தொடரும் யுத்தத்தை உடனடியாக சர்வதேசம் தலையிட்டு நிறுத்த வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். பாலஸ்தீன பகுதிகளில் யுத்தம் மற்றும் ஆக்கிரமிப்புக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ள யூத - இஸ்ரேலிய கூட்டமைப்பை சேர்ந்தவர்கள் என தங்களை காண்பித்துக் கொண்டவர்களினாலேயே இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இவர்களது இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக குறித்த பகுதியில் பெரும் பதற்றமானதொரு சூழல் காணப்பட்டதோடு, பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



## அமெரிக்காவைத் தாக்கிய ஹெலீன் சூறாவளி 43 பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் தென்கிழக்கு பகுதியைக் கடந்த வெள்ளிக்கிழமை ஹெலீன் சூறாவளி தாக்கியதில் குறைந்தது 43 பேர் உயிரிழந்துள்ளதோடு, இலட்சக்கணக்கானவர்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

புளோரிடா வளைகுடாவை தாக்கிய சக்தி வாய்ந்த இச் சூறாவளியால் கடந்த வியாழக்கிழமை இரவு பெய்த மழையினை அடுத்து மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

அதனை அடுத்து ஜோர்ஜியா மற்றும் கரோலினாஸ்க்கு வடக்கே சூறாவளி கரையை கடந்துள்ளது. இந் நிலையில், ஹெலீன் சூறாவளி வலுவிழந்திருந்தாலும் அதிக காற்று, வெள்ளம் மற்றும் சூறாவளி அச்சுறுத்தல் தொடரும் என்று முன்னறிவிப்பாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இன்னும் சில இடங்களில் 50 சென்ரி மீற்றர் வரை அதிக பலத்த மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவைத் தாக்கிய சூறாவளிகளில் 14 ஆவது சக்தி வாய்ந்த சூறாவளியாக இது பதிவாகியுள்ளது. (நி)

## பீகாரில் 'ஜிவித்புத்ரிகா' திருவிழா 44 பேர் நீரில் மூழ்கி உயிரிழப்பு



(டில்லி)

கிழக்கு இந்திய மாநிலமான பீகாரில் 'ஜிவித்புத்ரிகா' பண்டிகை கொண்டாட்டத்தின் போது நீரில் மூழ்கிய சம்பவத்தில் 44 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் குறைந்தது 15 மாவட்டங்களில் இருந்து உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளதாகவும் உயிரிழந்தவர்களில் பெரும்பாலனோர் சிறுவர்கள்/குழந்தைகள் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி உயிரிழந்த சிறுவர்கள்/குழந்தைகள் எண்ணிக்கை 37 ஆகவும் பெண்களின் எண்ணிக்கை 7 ஆகவும் உள்ளது.

இதுகுறித்து மாநில அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதுவரை மொத்தம் 44 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் தேடுதல் பணி நடந்து வருகிறது என்றும் இதனால், உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் செலுத்த வேண்டிய சமயத்தில், அதை இனிமை மற்றும் மென்மையுடன் பயன்படுத்துங்கள். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அன்பார்ந்த வர்த்தகர்களே! விலைகளைக் குறையுங்கள்

புண்ணியம் செய்பவன் யார்? எனப் பாரதியாரிடம் கேட்கிறார்கள்.

“பக்கத்திருப்பவர் துன்பந்தன்னைப் பார்க்கப்பொறாதவன் புண்ணியமூர்த்தி” என விளக்கம் தருகிறார் பாரதியார்.

ஆம்; என் அயலவர், பக்கத்தில் இருப்பவர், ஊரவர், உறவினர் என்போர் துன்பப்படும்போது, அதுகண்டு பொறுக்க முடியாத மனநிலை யாரிடமெல்லாம் உள்ளதோ அவர்கள் புண்ணியமூர்த்திகள்.

ஆம், அன்புக்குரிய வர்த்தகப் பெருமக்களே! இந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள அநுர குமார திஸாநாயக்கவால் மட்டும் ஊழலை – மோசடியை – அநீதியை – அக்கிரமத்தை – அடாவடித்தனத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட முடியும் என்று நாங்கள் நினைப்போமாயின், அதைவிட்ட தவறு வேறெதுவுமாக இருக்க முடியாது.

ஆம், மேற்கூறப்பட்ட அக்கிரமங்களை அடியோடு ஒழிப்பதாக இருந்தால், இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைகளும் அதற்காகப் பாடுபட வேண்டும்.

அதனைச் செய்யாதவிடத்து, எங்கோ ஒரு மூலையிலேனும் ஊழலும் அக்கிரமமும் முளைத்துக் கொண்டே இருக்கும்.

உண்மை. இப்போதெல்லாம் அனைத்துப் பொருட்களினதும் விலைகள் கணிசமாகக் குறைந்துள்ளன.

இருந்தும் எமது வர்த்தகர்கள் அந்த விலைக்குறைப்பைச் செய்வதற்குத் தயங்குகின்றனர்.

ஒருபுறத்தில் அரசியல்வாதிகளின் ஊழல் கண்டு நெஞ்சம் பதறுகிறது.

இப்படியெல்லாம் அரச சொத்துக்களை ஏப்பமிடுகிறார்களே என்று மனம் வேதனை கொள்கிறது.

ஆனால் அதேநேரம் வர்த்தகம் என்ற பெயரால், பொதுமக்களிடம் இருந்து அதிக பணத்தை அறவிடும்போது அதைவிட்ட அநியாயம் வேறு எதுவாக இருக்க முடியும்.

அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபல வர்த்தகரைச் சந்தித்தோம். 50 கிலோ எடை உடைய ஒரு பாக் சீமெந்தை ஆயிரத்து ஐந்நூறு (1500/=) ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும். ஆனால் இரண்டாயிரம் ரூபாவுக்கே விற்பனை செய்யப்படுகிறது எனக் கூறினார்.

ஆக, எமது வர்த்தகப் பெருமக்கள் நியாயபூர்வமான இலாபத்தோடு பொருட்களை நுகர்வோருக்கு வழங்க முன்வர வேண்டும். அதுதான் வர்த்தக தர்மம்.

அதோ! வன்னிப் போர் வெற்றியை தம்பி அறிவிக்க, நெஞ்சு நிமிர்த்தி நின்று அண்ணன் கேட்டு மகிழ்ந்ததைக் கண்டோம்.

போர் வெற்றி என்றதும் விமான நிலையத்தில் வீழ்ந்து மண்ணை வணங்கியதைப் பார்த்தோம்.

ஆனால், பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் போரில் கொல்லப்பட்டனரே என்று இம்மியும் சிந்தியாதவர்களின் இன்றைய நிலைமை என்ன?

ஆகையால், கடவுளுக்குக் கணக்குக் கொடுத்து வர்த்தகம் செய்வோம். அறத்தால் வருவதே இன்பம் என்று உபதேசித்த வள்ளுவன் வழியில் நடப்போம்.

# புதிய ஜனாதிபதி அநுரவுடன் இணைந்து பணியாற்றத் தயார்

## வாழ்த்துச் செய்தியில் சிங்கப்பூர் தலைவர்கள்

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் இணைந்து பணியாற்றத் தயார் என சிங்கப்பூர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தெரிவித்துள்ளனர்.

புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்னம் மற்றும் பிரதமர் லோரன்ஸ் வோங் ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

அநுர குமார திஸாநாயக்க தேர்வானமை நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு இலங்கை மக்கள் அவர் மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடு என சிங்கப்பூர் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியில்,

“சிங்கப்பூரும் இலங்கையும் நுணுக்கமான பொருளியல் ஒத்துழைப்பாலும் நெருங்கிய உறவாலும் நீண்டகால நட்புறவை கொண்டுள்ளன.

2025 ஆம் ஆண்டில், இரு நாடுகளும் 55 ஆண்டுகால அரச தந்திர உறவை நினைவு கூரும் வேளையில், இரு தரப்புக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த உங்களுடன் இணைந்து பணியாற்ற ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறேன்” என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சிங்கப்பூரும் இலங்கையும் திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒருமித்த ஆர்வங்களைக் கொண்டுள்ளதாகவும் அந்நாட்டு பிரதமர் லோரன்ஸ் வோங் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் விரிவுபடுத்த இணைந்து பணியாற்றுவதாகவும் அவர் உறுதியளித்தார். (ம-7)

# தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள் சர்ச்சை

## 7 பேர் கொண்ட விசாரணைக்குழு அமைப்பு

வினாத்தாள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இந்த வருடம் மீண்டும் நடத்துவதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானிப்பதற்காக 7 பேர் கொண்ட குழுவொன்றை நியமிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்தார்.

இந்த வருட புலமைப் பரிசில் பரீட்சையில் சில வினாக்கள் கசிந்தமையினால் பதற்றமான சூழ்நிலை உருவானதுடன், பரீட்சைத் திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

மேற்படி, விசாரணைகளைக் கருத்தில்கொண்டு மீண்டும் பரீட்சை நடத்தப்படுமா? இல்லையா? என்பது தொடர்பில் குறித்த குழுவால் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்க

## மோடியிடம் ஸ்டாலின் கோரிக்கை

(சென்னை)

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்க என பாரத பிரதமர் மோடியிடம் தமிழக முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை மெட்ரோ திட்டம், இந்திய - இலங்கை மீனவப் பிரச்சினை ,கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை உள்ளடக்கிய மனுவையும் கையளித்தார்.

டெல்லியில் பிரதமர் மோடியை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நேரில் சந்தித்த போதே அவர் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தார்.

கச்சதீவை தி.மு.க தாரைவார்த்ததாகக் கூறுவது தவறு என்றும் கச்சதீவை மீட்க சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம் என்றும் ஸ்டாலின் இதன்போது தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் ஸ்டாலின் முன்வைத்த முக்கிய கோரிக்கைகளாவன,

01.சென்னையில் செயற்படுத்தப்பட்டு வரும் மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டப் பணிகளுக்கான மத்திய அரசின் பங்காக 7,425 கோடி ரூபா நிதியை வழங்க வேண்டும்.

02. கல்வித்துறைக்கான சமக்ரா சிக்ஷா திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனே விடுவிப்பது அவசியம்.

03. மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும், இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் சிறைப்பிடிக்கப்படுவதை தடுக்க வேண்டும் என்ற மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்திருந்தார். (ம-7)

# மட்டக்களப்பில் மதுபான விருந்தில் கைகலப்பு

## 18 வயது இளைஞன் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சுவிஸ் கிராமத்தில் அமைந்துள்ள வீடொன்றில் நண்பர்கள் சேர்ந்து மதுபானம் அருந்தியபோது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் சண்டையாக மாறிய நிலையில், இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

அதனையடுத்து தாக்குதலில் ஈடுபட்ட 30 வயது நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

சுவிஸ் கிராமத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞரே உயிரிழந்துள்ளார். தாக்குதல் இடம்பெற்ற வீட்டில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் நண்பர்கள் 5 பேர் ஒன்றுகூடி மதுபானம் அருந்தியுள்ளனர்.

பின்னர், அவர்களிடையே ஏற்பட்ட வாய்த்தகராறு சண்டையாக மாறியுள்ளது.


அவ்வேளை ஐவரில் ஒருவர் கூரிய ஆயுதத்தால் கழுத்துப் பகுதியில் தாக்கப்பட்டு, படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அந்த இளைஞர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது, இதனையடுத்து தாக்குதலில் ஈடுபட்டவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய நான்கு பேர் கைது

## 3 மோ.சைக்கிள்கள், நகைகள் மீட்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அவர்கள் பயன்படுத்திய மூன்று மோட்டார் சைக்கிள்கள் மற்றும் களவாடப்பட்ட ஒரு தொகை நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, இராமநாதபுரம், புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை நெடுங்கேணி ஆகிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறுபட்ட திருட்டுச் சம்பவங்களுடன் குறித்த சந்தேக நபர்கள் தொடர்புபட்டுள்ளதாகவும் இவ்வாறு கொள்ளையிடப்பட்ட நகைகள் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வங்கிகள், அடைவு நிலையங்களில் சுமார் இருபத்தியெட்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகளில் அடைவு வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் (6-315)

# முல்லையில் அணைக்கட்டுக்கள் குளங்கள் திருத்தம் தொடர்பில் அதிகாரிகள் ஆராய்வு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் UN habitat நிறுவனத்தின் நிதி பங்களிப்புடன் தெரிவு செய்யப்பட்ட குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் திருத்தம் தொடர்பாக ஆராய குழுமுனை மற்றும் கொக்குத்தொடுவாய் பகுதிகளுக்கு கள விஜயம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மற்றும் UN habitat நிறுவனத்தினர், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்துகொண்டனர். (6)

# முல். மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் முல்லைதீவு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் முல்லைதீவு மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல் நிகழ்வானது கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த 26 ஆம் திகதி மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் அடையாளப்படுத்தபட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், காணி விடுவிப்புகள், விவசாயக் காணி பகிர்ந்தளித்தல் போன்ற விடயங்கள் அதற்கு உள்ளடங்கலான தீர்வு கள் மற்றும் எதிர்கால செயற்பாடுகளுடன் முன்னோக்கி செல்லுதல் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதில் வடக்கு மாகண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர், பிரதேச செயலர்கள், உதவி பிரதேச செயலர்கள், பல்துறைசார் அரச உயர் அலுவலர்கள், கிறிசலிஸ் நிறுவன திட்ட மற்றும் பிராந்திய முகாமையாளர், சிரேஷ்ட திட்ட இணைப்பாளர், திட்ட இணைப்பாளர்கள் மாவட்ட மற்றும் பிரதேச பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர், மாவட்ட மற்றும் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிராந்திய உள்ளூராட்சி திணைக்கள அலுவலர்கள், பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு பொலிஸ் அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர் ஒன்றியத் தின் உறுப்பினர்கள், முல்லைத் தீவு மாவட்ட குடிசார் அமைபபுக்களின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள் ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (6)

# இரணைமடுக்குள பெரும் போகம் முன்னெடுக்கப்பட்ட தீர்மானம்

(கண்டாவளை)

கிளிநொச்சி, இரணைமடுக்குளத்தின் கீழான 2024/2025 பெரும்போக பயிர்ச் செய்கை தொடர்பான கூட்ட மொன்று மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மற்றும் கரைச்சி பிரதேச செயலாளர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது

இதன் போது இரணைமடு குளத்தின் கீழ் உள்ள ஆற்றொதுக்குப் பிரதேசங்கள், கழிவு வாய்க்கால்கள், வீதிகள் என்பவற்றை தவிர்த்துப் பயிர்ச் செய்கை மேற்கொள்வது தொடர்பாக கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த கலந்துரையாடலில் கடந்த காலங்களில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக விவசாயி களால் சுட்டிக் காட்டப்பட்டது.

மேற்படி, கலந்துரையாடலில் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பொறியியியலாளர், துறை சார்ந்த திணைக்களத்தலைவர்கள் மற்றும் விவசாயிகள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (6-315)

# சிறுவர்களுக்கு நீதி கோரி கிளிநொச்சியில் போராட்டம்

## காணமலாக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு

**தருமபுரம்**

**சர்வதேச சிறுவர் தினமான ஒக்டோபர் முதலாம் திகதி சிறுவர்களுக்கு நீதி வேண்டி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கவனயீர்ப்பு போரட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி க. கோகிலவாணி தெரிவித்தார்**

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட் ஜனாதிபதி எமது காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்கு நீதியைப் பெற்றுத்தர வேண்டும். தேர்தல் பிரசாரங்களில் குறிப்பிட்டது போல நீதியை பெற்றுத்தர வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார். (6-316)

# 77,908 அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றம்

## ஸார்ப் நிறுவனம்



(கண்டாவளை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 31 இலட்சத்து 43 ஆயிரத்து 871 சதுரமீற்றர் பரப்பளவு நிலப்பகுதியிலிருந்து 77,908 அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்ட விபரத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வட பகுதியில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்க நாட்டு நிதி உதவியுடன் ஈடுபடும் ஸார்ப், மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2024 செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தச்சடம்பன், அம்பகாமம், ஒலுமடு, மாங்குளம், கொக்காவில் பகுதியிலும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை, இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் கண்டாவளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தட்டுவன் கொட்டி பகுதியிலும் 31 இலட்சத்து 43 ஆயிரத்து 871 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 77,908 அபாயகரமான வெடி பொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடி அகற்றும் பணிகளை புதுக்குடியிருப்பு, அம்பகாமம் இமாங்குளம், கொக்காவில், தட்டுவன்கொட்டி மற்றும் ஆனையிறவிலும் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபரீத...

வரன் (வயது-58) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரான்ஸ் நாட்டில் 20 வருடமாக வசித்து வந்த குறித்த நபர் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் இருபாலைப் பகுதியில் வந்து தங்கியிருந்துள்ளார்.

மன அழுத்தத்துக்குள்ளான இவர் நேற்று சனிக்கிழமை வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7)

## தமிழ்த் தேசிய...

தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன், "அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய சிவில் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

இதன்போது கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும், "ஏற்கெனவே கட்சிகள், சிவில் அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து ஒரு தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளனர். பிறகு எதற்கு வேறு அமைப்பு?" என்று கேள்வி எழுப்பினர்.

இதன்போது பதிலளித்த சிவகரன், "தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்பது 7 தனிநபர்களைக் கொண்ட அமைப்பு. அவர்களுக்குப் பின்னால் எந்த அமைப்பும் இல்லை. அவர்கள் செயற்பாட்டாளர்களே தவிர அமைப்புக்கள் அல்ல. நாம் அமைப்புக்களை உள்ளடக்கி இதை உருவாக்குவோம். அவர்களுடனும் தேவையெனில் பேசுவோம். அங்கும் எமக்குத் தெரிந்தவர்களே உள்ளனர். நிலாந்தன், ஜதீந்திரா, கணேசலிங்கம், விக்னேஸ்வரன் என 7 பேர் உள்ளனர்" என்றார்.

இதன்போது, சிவகரனின் கருத்துடன் உடன்படவில்லை எனத் தெரிவித்து வவுனியாவைச் சேர்ந்த சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் அதிருப்தியைத் தெரிவித்துக் கூட்டத்தில் இருந்து வெளியேறிச் சென்றனர்.

அவர்கள் கருத்துத் தெரிவித்த போது, "இவர்கள் ஒரு தீர்மானத்துடன் வந்து அதனை இங்கு திணிக்க முயல்கின்றார்கள். ஏற்கெனவே ஒரு தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என அமைப்பு ஒன்று உள்ளபோது புதிதாக ஒரு அமைப்பை உருவாக்கி மக்களைக் குழப்பியடிக்கக்கூடாது. அனைவரும் இணைந்து பயணிக்க வேண்டும். அதனால் வெளியேறுகின்றோம்" என்று தெரிவித்தனர். இந்தக் கலந்துரையாடலில் க.அருந்தவபாலன், முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர்களான ப.டெனீஸ்வரன், அனந்தி சசிதரன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7)

## எரிவாருள்...

அநுரவிடம் முன்னாள் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எரிபொருள் மீதான வரியை நீக்குவோம் எனத் தேர்தல் பேரணிகளில் தெரிவித்ததற்கு அமைய சுமார் ஒரு லீற்றருக்கு 150 ரூபாய் குறைக்கப்பட வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சட்ட விதிகளின்படி, 30ஆம் திகதி இரவுக்குள் எரிபொருள் விலைத்திருத்தம் செய்யப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் அவர்கள் வாக்குறுதி அளித்தபடி எரிபொருள் மீதான வரிகளை நீக்கினால், ஒரு லீற்றர் டீசல் 100 ரூபாய் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலை கருத்திற்கொண்டு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில் இடைநிறுத்தப்பட்ட கடந்த அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகளை, தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு முன்னாள் அமைச்சர் கஞ்சன விஜேசேகர நன்றி தெரிவித்தார். (ம-7)

## இறைச்சிக்காக...

பொன்னாலை மேற்கைச் சேர்ந்த இருவர் இப் பசுமாட்டினை வெட்டியதாக அறிய முடிகிறது.

இதுகுறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில், பசுவை வெட்டியவர்கள் மூவரைக் கைது செய்து


# பெண் பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றுக்கு பெண் பணியாளர் தேவை.

தகைமை

- A/L சித்தி
- வயதெல்லை 18 - 25
- சம்பளம் நேர்முகத்தேர்வில் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 076 393 0010

(C-1283)




மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

அவர்கள் மூவரையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-7)

## இலங்கையின்...

இதில் உரையாற்றும்போதே அமெரிக்கத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7)

## 3 ஆண்டுகளில்...

மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய ஜனாதிபதிகள் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் மனைவி ஹேமா பிரேமதாஸ ஆகியோர் கடந்த மூன்று ஆண்டுகளாக 27 கோடி ரூபாய் செலவு செய்துள்ளார்கள் என மத்திய வங்கியின் அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது

இவர்களுக்காக 2022 இல் 7 கோடி ரூபாயும் 2023 இல் 8 கோடி ரூபாயும் 2024 இல் 11 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகப் பொருளியல் விஞ்ஞான புள்ளிவிபரவியல் கல்வி பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார். (ம-7)

## பிரிந்...

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து போட்டியிடுவதற்கு முன்வருமாறு கூட்டணியிலிருந்து விலகிச் சென்ற ஏனைய பங்காளிக் கட்சிகளுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவ்வாறு குறித்த கட்சிகள் இந்த அழைப்பை ஏற்று மீண்டும் இணையாவிட்டால் இலங்கைத் தமிழரசுக் கட்சியாகத் தனித்துப் போட்டியிடுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தமிழர்கள் செறிந்து வாழும் கொழும்பு உள்ளிட்ட மாவட்டங்களிலும் போட்டியிடுவது குறித்துப் பரிசீலிப்பதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (ம-7,250)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.09.28
சீட்டிழுப்பு இலக்கம் 5609
W 3 4 0 1 3 3
அத சம்பத
W 0 1 3 3
சீட்டிழுப்பு இலக்கம் 184

தன நிதானய
திகதி - 2024.09.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1639
A 16 21 48 65 A
75915

மெகா பவர்
திகதி 28/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1957
F 15 14 45 60 63
27029

லக்கி 7 VIP
திகதி 2024.09.28
சீட்டிழுப்பு இலக்கம் 0435
T 4 6 0 8 0 5 T

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3851
சீட்டிழுப்பு திகதி 28.09.2024
Q 13 37 57 71
Q 59787

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.28
சீட்டிழுப்பு இலக்கம் 918
மிதுனம் 01 11 29 43 மிதுனம்
38657 02

உத்தியோகபூர்வ முடிவுகள்
28.09.2024 வெற்றி வாரம் 317 வர்ணம் நீலம்
X 9 5 0 4 4 5
57964
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,803,784.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2583 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 28.09.2024 தினம் சனிக்கிழமை
13 19 44 57 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,062,889.60

சனிதா
திகதி 2024.09.28 வெற்றி வாரம் 4744
01 33 42 45 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,326,689.60
14722

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4295 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.09.28 தினம் சனிக்கிழமை
17 52 53 55 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,216,535.60
152719

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 23 12 17 34 69
1759 சிவப்பு 28.09.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 547,354,969.40

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2409
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,228,666.40
ADA KOTIPATHI
09 15 64 69 Y
651216


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1279)

## இந்தியன் விசா சேவைகள்
ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)
(385)

## வாடகைக்கு
கிளிநொச்சி RDA நிறுவனத்திற்கு முன்பாக உள்ள 1 ½ ஏக்கர் சுத்து மதிலுடன் உள்ள 3 அடுக்குமாடி வீட்டுடன் கூடிய காணி தொழில் நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு:
077 108 3481
(C-1285)

## தேவை
சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை.
சுண்டுக்குளி, கொழும்புத்துறை, அரியாலை போன்ற இடங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு;
071 104 1851
(2153)

## காணி விற்பனைக்கு
மயிலிட்டியில் குகன் வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு;
077 666 0229
(2145)

## தேவை
நெல்லியடியில் குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு;
077 199 6912
(C-1277)

## வாகனம் தேவை
பெரிய ரக CAR மற்றும் 10.5 அடிக்கு மேல் உள்ள லாரி மாத வாடகைக்கு தேவை. இலங்கையில் எங்கிருந்தாலும் அழைக்கவும்.
077 473 7737
(2151)

## Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-1279)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## வேலையாள் தேவை
பூநகரி பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் தங்கி நின்று வயல் வேலை செய்வதற்கும் தென்னங்காணி பராமரிப்பிற்கும் வேலையாள் தேவை. கனரக வாகன(உழவு இயந்திரம்) அனுமதிப்பத்திரம் கொண்டிருத்தல் வேண்டும். உணவு, தங்குமிட வசதிகள், கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 628 4164
(2136)

## IELTS CLASSES
கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN
GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.
ENGLISH 30% Special offer for all the courses
(வாழ்க்கை துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970
(1819)

## விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
1%
• Visit visa
• Student visa
• Fixed & saving
• லட்சத்திற்கு 1000 மட்டுமே
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்.
தொடர்புகளுக்கு:
075 033 6759
(1908)

## காணி விற்பனைக்கு
கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் இருந்து 100m தூரத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.
077 836 3050
075 889 5625
2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரித்தும் கொடுக்கப்படும்.
(2141)

## பதவி வெற்றிடம்
யாழில் உள்ள பிரபல வைத்தியசாலையானது பின்வரும் பதவிகளுக்காக தகுந்த பெண் ஊழியர்களை எதிர்பார்க்கின்றது.
- வரவேற்பாளர்கள்
- காசாளர்
- பிரதி மனிதவள முகாமையாளர்

குறிப்பு: யாழ். நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் உங்களது சுயவிபரக் கோவையினை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு 04.10.2024 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
மேலும் தொடர்புகளுக்கு - 0742027318 அலுவலக நேரத்தில் மட்டும் (காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை)
(2137)

## EDUCATION Yaalpaanam 5
எடியூகேஷன் யாழ்ப்பாணம்
5th & 6th OCTOBER
09 AM - 04 PM
Jaffna Public Library
யாழ்ப்பாணம் பொது நூலகம்
Some of Our Success Stories






■ Student Visa ■ Work Visa ■ Skill Migration
- புலமைப் பரிசில்கள் ( Scholarship )
- ILTS தள்ளுபடிகள்
- மலிவான கல்வி கட்டணம்
- பல்கலைக்கழக நேர்காணல் இல்லை

(2152)
கலந்தாய்வு இலவசம்
(No consultant fees)
Call us
ICFS INTERNATIONAL CENTER FOR FOREIGN STUDIES
077 740 6793 | 0112 827 320
151D, High Level Road, Nugegoda

## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 244/= |
| 1 Kg prima கோதுமை மா | - 159/= |
| 1 Kg றவை | - 284/= |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 379/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 277/= Max - 03 Kg |
| 1 Kg சம்பா | - 230/= |
| 1 Kg மல்லி | - 380/= |
| 1 Kg கீரி சம்பா | - 260/= |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= ~~105/=~~ |
| 01 Ocean மீன் ரின் | - 365/= ~~500/=~~ |
| 01 சன் பப்படம் | - 190/= ~~225/=~~ |
| 400 g வட்டவல தேயிலை | - 999/= ~~1120/=~~ |
| 70 g பேபி சோப் | - 115/= ~~145/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 140/= ~~165/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3400/= ~~3900/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 52/= ~~80/=~~ |

Max - 04
400g Anchor
1010/=
~~1050/=~~



தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்
பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
(385)
Happy Supermarket
0777 8080 30

## தங்கம்மா முதியோர் இல்லம் - அனுமதி
இல - 01, புதுக்குளம் வீதி, கனகராஜன்குளம்.

மேற்படி முகவரியில் இயங்கி கொண்டிருக்கும் எமது முதியோர் இல்லமானது தற்பொழுது புதிய ஆண் மற்றும் பெண் முதியவர்களுக்கான அனுமதிகளை வழங்கவுள்ளதால் எமது முதியோர் இல்லத்தில் இணைய விரும்பும் முதியவர்கள் உங்கள் பகுதி கிராம சேவையாளர்களின் சிபார்சுடன் இணைய முடியும்.

1. சகல வசதிகளுடன் கூடிய தங்குமிடம் மற்றும் மூன்று வேளை உணவு எம்மால் வழங்கப்படும்.

2. தங்கள் சுய வேலைகளை தாங்களே மேற்க் கொள்பவர்களும் மற்றும் நற்குணமுள்ள முதியவர்களையும் மட்டுமே எமது முதியோர் இல்ல நிர்வாகம் ஏற்றுக் கொள்ளும்.

குறிப்பு :- எமது முதியோர் இல்லத்திற்கு நிதி உதவிகள் வழங்க கூடிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உறவுகள் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.
(2133)
Murali – 077 910 8402 / Selva – 0777 110 862
Ranjan - +61 428 138 232 (Chairman - Vanni Hope - Australia)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல. ..., ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.